[illegible]ப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. உ ஆரம்பமானது: விரோதிவரு (1889) ஆவணிமீ உஅவ

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்"

THE SAIVA PRAKASA PRESS

# இந்துசாதனம்

(SUPPLEMENT TO THE HINDU ORGAN.)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேக்கச்
செவ்பூத்த ரீகமாக மக்க ளோக்கப்
பார்பூத்த புறச்சமய விருளை வீக்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோ ராக்கப்,
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூக்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ருேது
மதம்பூத்த விநாயகன்ருள் வணங்கிவாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஹூ வைகாசிமீ ஙகஉ ( 1935 ஜூன் 13 வியாழக்கிழமை. ) { இலக்கம்—கஅ



## கந்தாலங்காரம்.

யான்ரு னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்ருது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்ருன் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினுற்
சான்ருரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

இ—ள்: தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க் கீன்ருன் மருகன் — பழைமையாகிய இப்பூமியை (ச்சுவேத) வாரகமாக அகழ்ந்தவராகிய விஷ்ணுமூர்த்தியின் மருகரும்; முருகன் — இளமையோடுகூடியவரும்; க்ருபாகரன் - கிருபைக்கு இருப்பிடமாகவுள்ளவருமாகிய சுப்பிரமணியக் கடவுள்; சான்று ஆரும் அற்ற தனிவெளிக்கே வந்து சந்திப்பது - சாட்சியாருமில்லாத தனிவெளியின் கண்ணே வந்து சந்தித்தல்; யான் தான் என்னும் சொல் இரண்டும் கெட்டாலன்றி - "யான்" "தான்" என்ற இரு சொற்களால் ஆகும் மலவாசனை கெட்டாலல்லாமல்; கேள்வியினுல் யாவருக்கும் தோன்ருது - நூற்கேள்வியினுல் எவர்க்கேனும் கைகூடாது; சத்தியம் - இது உண்மை, எ-று.

பசுவாகிய யான் என்பதும் பதியாகிய தான் (அவன்) என்பதும் கெட்டு ஒன்ருகக் காணும் ஞானநிலையை அடைந்தாலொழியச் சந்திப்பது கூடாமையின், "யான்ருன் என்னுஞ் சொல்லிரண்டுங் கெட்டாலன்றி" யென்ருர் இதனை "யான்ருனெனல் அறவே இன்பகிட்டை" எனத் தாயுமானசுவாமிகள் கூறியவாற்ருனும் அறிக. யாருமற்ற தனிவெளி - தத்துவங்கள் முதலியன சுழன்ற அருள்நிலை; கீண்டான் என்பது எதுகை நோக்கிக் கீன்ருன் என வந்தது. இது உண்மை நிலை கூறியவாறும்.

போதவாசனை நீங்கினுலொழியச் சிவானந்தஞ் சித்தித்தல் அரிது என்றபடி. (கூடு)

## பிணையில் விடுதலையானுர்

—:*:—

### மனைவியைக் கொன்ற செனிவரத்தினுவின் மறு.

### 50000 ரூபாய் பிணை வேண்டுமாம்.

தமது மனைவியைக் கொன்ருர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதித்தபின் மன்னிக்கப்பட்டு ஜீவியகாலச் சிறைத்தண்டனை பெற்ற மிஸ்ரர் ஸ்ரீபன் செனிவரத்தின என்னும் பரிஸ்ரர் பிரிட்டிஷ் உயர்தர நீதிமன்றத்துக்கு மறுச் செய்திருக்கிருர். இதுசம்பந்தமான விசாரணை இப்போது நடைபெறுகின்றது.

விசாரணை முடியும் வரையில் அவர் 50000 ரூபாய் பிணையில் விடுதலையாகலாம் என்று தேசாதிபதி அவர்கள் இப்போது உத்தரவிட்டிருக்கிருர்.

## சத்சோதிட சபையை நிர்வகிக்கும் நிர்வாகசபைத் தெரிவு.

1935ம் ஆண்டு ஆனிமீ 2-ந் திகதி காலை ஒன்பது மணிக்கு வண்வீரமாகாளி யம்மன் கோயிலில் சுப்ரீங்கோட்டு முதலியார் ஸ்ரீமான் த. வேலாயுதம்பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் சத்சோதிட சபையை நிர்வகிக்கும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக எண்மர் தெரிவு செய்யப் பெற்றனர்.

நிர்வாகசபைத் தலைவராக ஸ்ரீமான் சு. சிவசம்பு அவர்களும் காரியதரிசிகளாக ஸ்ரீமான் C. குமாரசுவாமி அவர்களும் ஸ்ரீமான் வ. சி. இராசையா அவர்களும் ஏகமனதால் நியமனஞ் செய்யப்பெற்றனர்.

கடித.

## யுத்தமும் அவசரத் தீர்மானமும்

—(*)—

### ஜப்பானிய பிரதம தளகர்த்தரின் எச்சரிக்கை.

ஜப்பானிய கடற்படைகளின் பிரதம தளகர்த்தராகிய அட்மிரல் டகா ஹாஷி, ஓர் பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது ஜப்பானிய மக்களுக்கு எச்சரிக்கையொன்று செய்திருக்கிருர்.

1905-ல் ஏற்பட்ட ருஷ்ய—ஜப்பான் யுத்தத்திற்குக் காரணம், மூன்று அந்நிய நாடுகள் 1895-ல் தலையிட்டதனு லேற்பட்டதென்றும், அது போலவே இப்பொழுது ஜப்பானில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமைக்கு வாஷிங்டன், லண்டன் கடற்படை ஒப்பந்தங்கள் உண்டாகியிருக்கின்றனவென்றும், மேற்படி ஒப்பந்தங்களில் ஜப்பானுக்குக் குறைந்த விகித கடற்படை பலம் அனுமதித்திருப்பதானது ஜப்பானிடம் சீனர்களுக்கு அருவருப்புண்டாக்கி, மஞ்சூரியப் பிரச்சினையைக்கிளப்பிவிட்டதென்றும் அட்மிரல் டகா ஹாஷி கூறினுர்.

ஆகவே, ஜப்பானியர் எல்லோரும் ஒன்றுபட்டு, தங்களுடைய தேசியக் கொள்கையைச் சரிவரக் கடைப்பிடிக்கவேண்டுமென்று வற்புறுத்தினுர். ஐரோப்பிய சமாதானத்திற்கு எவ்விதம் ஐரோப்பியர்களும், அமெரிக்காவின் சமாதானத்திற்கு அமெரிக்கதேச மக்களும் பொறுப்பேற் றிருக்கின்றனரோ, அதேமாதிரி கிழக்காசியா நாடுகளின் சமாதானத்தைக் காப்பாற்ற ஜப்பான், சீன, மஞ்சுகுவோ ஆகிய நாடுகளே ஒற்றுமையுடன் முயற்சிக்கவேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டார்.

## சென்ற ஆண்டில் தூக்குத் தண்டனை.

சென்ற வருஷம் இலங்கையில் 25 குற்றவாளிகள் மாத்திரமே தூக்கிட்டுக் கொல்லப்பட்டனர் என்று இலங்கைச் சிறையதிகாரி தமது பரிபாலன அறிக்கைப் பத்திரத்திற் குறிப்பிடுகின்ருர்.

—

## ஜப்பானுக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் நெருங்கிய நேசம்.

நாளுக்கு நாள் ஜப்பானுக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் நெருங்கின சிநேகப்பான்மை ஏற்பட்டு வருவதால் அதிகமான ஜப்பான் பிரயாணிகளும், வியாபாரிகளும் காபூலில் தினந்தோறும் வந்திறங்குகின்றனர். சமீபத்தில் 'யூஸி கயோஹா' என்ற ஜப்பானியர், யோகஹாமா பாங்கியின் பிரதிநிதி ஒருவர் காபூலுக்கு வந்து நாமி ஹோட்டலில் தங்கியிருக்கிருர். ஆப்கானிஸ்தானத்தின் வர்த்தக நிலைமையையும், அவ்விடத்தில் ஒரு பாங்கி ஸ்தாபனம்பண்ண முடியுமாவென்றும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே அவருடைய முக்கிய நோக்கம்.

## சங்கீதக்கச்சேரி.

இந்நாட்டில் சங்கீதத்தைப் பரவச் செய்ய வேண்டுமென்னும் நோக்கமாக நிகழும் யுவ வருஷம் ஆனி மாதம் உ-ந் திகதி (16-6-35) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு, தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில், குவலாலம்பூர் சங்கீத அபிவிருத்திச் சபா மாணவிகளால் ஓர் சிறந்த சங்கீதக் கச்சேரி நடைபெறும்

—கடித.

—

## லண்டனுக்கு மங்குஸ்தான் பழங்கள்.

இலங்கை மங்குஸ்தான் பழங்களை லண்டனுக்கு அனுப்பி விற்பனையாக்குதற்குக் கொழும்பில் உள்ள சில பிரபல வர்த்தகர்கள் முயற்சிக்கின்றனர் என்று அறிகிருேம்.

—

## ஜோகூர் சுல்தான்.

ஜோகூர் சுல்தான் அவர்கள் சென்ற வியாழக்கிழமை கொழும்பை வந்தடைந்தார். அவர் சில தினங்களுக்கு இங்கு தங்கி விட்டு மீண்டும் பிரயாணமாவார்.

# இற்றலியில் ஆங்கிலர்க்கெதிர்ப்பு

## ஏகாதிபத்திய வாஞ்சை நாமும் கொள்ளுவேம்! சர்வாதிகாரி முசோலினியின் முழக்கம்.

### பிரிட்டிஷார்க்குச்சூடு; ஸ்தானிகர்க்குக் காவல்.

இத்தலிய—அபிஸீனியத் தகாறு சம்பந்தமாக, இற்றலியில் பிரிட்டிஷார்க்கு மாருக இப்போது கிளர்ச்சி நடந்துவருகிறது. பிரிட்டிஷ் ஸ்தானுதிபதியின் மெய்ப்பாதுகாப்பாளர் இப்போது அதிகரிக்கப்பட்டிருக்கின்றனர்.

சென்ற 8-ம் தேதி முசோலினி ஓர் பிரசங்கம் செய்தார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள வாக்கியங்கள் பிரிட்டிஷாரையே தாக்குவதாயிருந்தன. அவர் கூறியதாவது:-

"எமக்குப் பாடம் கற்பிக்க ஒரு சிலர் முனைந்து நிற்கின்றனர். ஆனுல், அவர்கள் எதைச் செய்கின்றனரோ அதனை நாமும் அப்படியே செய்வேம். ஏகாதிபத்தியம் ஒன்றைப் பாதுகாக்க அல்லது உண்டாக்க வேண்டுமானுல், அவர்கள் உலக அபிப்பிராயத்தையும் சட்டைசெய்யாது தம் கிருத்திரமத்தை ஆற்றிவருவர். கிழக்கு ஆபிரிக்காவில் நாம் செய்வனவற்றைப்பற்றி எவர் கூறினுலும் சட்டைசெய்யேம். எங்கள் அலுவல் எமக்கு நல்லாய்த் தெரியும். எமது நியாயாநியாயங்களையும் நாம் உணர்வேம்."

இங்கிலாந்து, இந்தியா விஷயமாக நடந்து கொண்டவிதத்தையே முசோலினி தம் பிரசங்கத்திற் குறிப்பிட்டார் என்று சொல்லப்படுகிறது.

# "குறித்தது கொள்ளாது போகாக் குணனுடையான்."

(பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள்)

தலைமகன் வருகின்றனன்; கண்டனள் தோழி; முன்னைநாள் அவன் செய்தன நினைப்பில் வந்தன. தலைவியை நோக்கிக் கூறுகின்றாள். ஏடி! ஈண்டு வருகின்றான் ஒருவன் பார்த்தாயா? இவன் என்ன குறை பெறாது திரிகின்றான்? இவன் கேட்டைப் பார்; தம் செல்வம் நீங்கப்பெற்று வறுமையடைந்த அறிஞர்தம் உறவினரை அடைந்து தமக்குற்ற குறையைச் சொல்லத் தொடங்கியபின் இடையிற் சொல்ல மாட்டாதிருப்பது போல இவனும் தான் கூறக் கருதிவந்ததை விட்டுவிட்டு என்னைப் பலமுறை பார்ப்பான்; யான் அவனைப் பார்க்கின் மெல்லெனத் தலைகுனிவன்"

இதற்கிடையில் தலைமகன் அவர்களை அண்மி விட்டனன். தோழி தலைவியை விட்டுவிட்டு அவனையடைந்தாள். ஏடா! நீ ஏன் குறிப்பால் எம்மோடு நட்புச் செய்யக் குறித்தாய்போல் எமக்கறிவித்தாய்? நின்னைவிடா நின்னிழ லென்ன என்னைவிட்டு நீங்காமற்றிரியும் காரணம் என்னே? நீ பெறாத குறையாது? யானறிதல் கூடாதா? அதனை இதுவென்று கூறு" என்றாள்.

தலைவன் தன்மனத்தொடு உசாவுவானாய் 'என்குறையைக் கூறின் இவள் மறுதலிவாளோ" என்றும் "சாதலினின்னாத தில்லை இனிததூஉம் ஈதலியையாக்கடை" எனுந் தேவர் திருவாக்குக்கு இலக்காதலுங் கூடுமோ? என்றும் கூறினன்.

அதுகேட்ட தோழி 'என்தலைவி தக்கதையில்லையென்னுதியும் காஞ்சு காதலதன் நீ வேண்டிய பொருள்யாது உடனே தருகுவன்; கூறு' என்றாள்.

தலைவன் சினங் கொண்டனன். தன் கூற்றின் குறிப்பறியாமையால் தோழியை "பேதாய்" எனப் பேசினன்; வெளிப்படையாயுரைக்க எண்ணினன். "பொருள் இரக்கும் சிரப்பு எனக்கு இல்லை; நின் தலைவியின் அருளே............யான் வேண்டுவது" என்றான். முன்னர் நிகழ்ந்த களவொழுக்கம் அறியாள்போல் 'அதுவோ, என்றாள் தோழி.

தலைவன் நீங்கத் தலைவி தோழியை அடைந்தாள். வீரம் மிகுந்த புருடனொருவனுக்கு ஒரு பெண்பேதை அருளும்படி கிடந்த குறையாது? , தலைவி! இவன் இரக்குங் காலத்தில் யான் எள்ளிச்சிரிப்பினும் பன்முறையும் வருவன். இடையிடையே கள்வர் தாங்கள் களவாடக் குறித்த பொருள்களைப் பாராது பார்ப்பது போல, நின்னைப் பார்ப்பன்; இவன் நாணமே இலாதவன்; என்செயினும் விட்டுப் பிரியான். இவன்போக்குப் பலரும் இகழ்ந்து சிரிக்கும் மடற் குதிரையில் யானேறும்படி அருள் செய்யாதவளோடு என்னிடை நிகழ்ந்தது வரிடத்தே அலராமே யெனக் கருதிச் செல்வான்போலேயிருந்தது. நின் தந்தை உள்ளங் குளிரக் கொடுத்தேனும் ..........................."குறித்தது கொள்ளாது போகாக் குணனுடையன்" ஆகையால் நீ இப்பொழுதே..........................................அருளினும் தடையில்லை; செய்யத்தக்கதை இன்னேசெய்.................. என்கருத்து' என்றனள்.

எல்லா விஃதொத்த னென்பெறான் கேட்
டைக்காண்
செல்வங் கடைகொளச் சாஅய்ச் சான்றவ
ரல்லல் களைதக்க கேளிருழைச் சென்று
சொல்லுத லுற்றுரைக் கல்லாதவர் போலப்
பல்லூழ் பெயர்ந் தென்னை நோக்குமற்றியா
னோக்கின்
மெல்ல விறைஞ்சுந் தலை
எல்லாநீ முன்னத்தா னென்று குறித்தாய்
போற் காட்டினை
நின்னின் விடாஅ நிழற் போற்றிரி தருவா
யென்னீ பெறாத தீதென்
சொல்லின், மறுதிவாள் மன்னோவிவள்:
செறு அது ஈதலிரந்தார்க் கொன்றாற்றுது
வாழ்தலிற்
சாதலுங் கூடுமா மற்று
இவடந்தை காதலின் யார்க்குங் கொடுக்
கும் விழுப்பொருள்
யாது நீ வேண்டியது
பேதாய் பொருள் வேண்டும் புன்கண்மை
யீண்டில்லை யாழ
மருளி மடைநோக்கி னின்றோழி யென்னை
யருளியல் வேண்டுவல் யான்
அன்னையோ மண்டம ரட்டகளிறன்னாந்
றன்னையொரு
பெண்டிருள் கிடந்த தேவன்கொலோ
ஒண்டொடீ நாணிலன் மன்ற வீவன்
ஆயின் ஏஏ
பல்லார் நக்கொள்ளப் படுமடன் மாவேறி
மல்லலூராங் கட்படுமே நகநக
னல்காள் கண்மாறி விடினெனச் சொல்
வானு
மெள்ளி நகினும் வரூஉ மிடையிடைக்
கள்வர் போனோக்கினு நோக்குங் குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடையனெந்
தை தன்
னுள்ளங் குறைபடா வாறு.

கலித்தொகை ௬௧.

## ரேக்களவு விசாரணை

——(o)——

### விலாசத்தில் மாற்றம் எப்படி வந்தது?

### போலிஸ்நீதிஸ்தல விசாரணை விபரம்.

(நமது நிருபர்)

கரையூரைச்சேர்ந்த ஜோசப் சூசைசாமி என்னும்மூவர் யாழ்ப்பாணம் ரேகுக் கதவையுடைத்து 9-மூடைசம்பா அரிசியைக் களவாடினர் என்று குற்றம் சாட்டப்பட்ட வழக்குச் சென்ற செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாணம் போலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டது. சென்றதவணையில்சாமி என்பவன் எதிரிகளில் ஒருவனாயிருந்தவன், இப்போது சாட்சியாய் விசாரணைசெய்யப்பட்டான்.

போலிஸ் சார்ஜன்ற் செல்லையாவழக்கை நடாத்தினர் எதிரிகளுக்காக நியாயவாதி ஸ்ரீ T. R. கல்லையாவும், பிறக்றர் R. R கல்லையாவும் ஏற்பட்டனர்.

முதலாவதாக ரேகுஅதிகாரி சாட்சியம் பகர்ந்தார். அவர் கூறியன வருமாறு:—

"சென்ற மேமாதம் 23ந் தேதி காலை நான் ரேகில் வந்துபார்த்தபோது 2-ம் இலக்க ரேகு அறைக்கதவுகள் பலாத்காரமாக உடைத்துத்திறந்திருப்பக் கண்டேன். கதவுகள் பூட்டப்பட்ட இரும்புச்சங்கிலி உடைக்கப்பட்டு இருதுண்டுகளாய்க் கிடக்கக்கண்டேன். அறையிற்குள் சென்று பார்த்தபோது ஓர் இரும்புஆயுதம் காணப்பட்டது. இதன் உதவியைக்கொண்டே கதவுகள் உடைக்கப்பட்டனவென்று யூகிக்கிறேன்."

நியாயவாதி ஸ்ரீ T R. கல்லையாவின் குறுக்குவிசாரணையில் சாட்சிகூறியன:—

"நான் 20 வருஷகாலமாக இரேகுப் பகுதியில் கடமை பார்த்திருக்கிறேன். களவுபோனமூடைகளில்' 4 செ.ந.(S. N.) விலாசமிடப்பட்டிருந்தன. 3 மூடைகளில் செ. சி. மு. என்ற விலாசம் இருந்தது. 'ச.' விலாசம் இடப்பெற்ற மூடை 1. மு. அ. மு. விலாசம் இடப்பெற்ற மூடை 1.

G/SDM விலாசமிட்ட மூடை 1ம் (JO / எழுத்தது தெரியவில்லை) விலாசமிட்ட மூடை 1ம்ரேகில் இருந்துகளவுபோனவை என இங்கு காணப்பட்டிருக்கின்றன. ஆனல் இந்தவிலாசம் இடப்பட்ட மூடைகள் எப்போதாவது ரேகுக்கு வரவில்லை."

சாமியின் சாட்சியம்.

அடுத்ததாகச் சாமியென்பவன் சாட்சியம் கூறினன் 22-5-35 இரவு $8\frac{1}{2}$ மணியளவில் 1ம் எதிரி தன் வீட்டிற்கு வந்து மண்டைதீவுக்குச் சில அரிசி மூடைகள் ஏற்றிக்கொண்டுபோக வரவேண்டுமென்று கேட்டான் என்றும், அதற்கு 1 ரூபா சம்பளம் தருவதாகச் சொன்னன் என்றும், தோணிக்குள் மூடையை ஏற்றியவுடன் மண்டைதீவுக்குப்போகாமல் தோணி கொழும்புத்துறைக்குச் செலுத்தப்பட்டு அங்கு மூடை பறிக்கப்பட்டதென்றும் கூறினன்.

கொட்டடி வாசியான சுப்பையா என்னும் முக்கத்தன் சாட்சியம் கூறுகையில் நீதிஸ்தலத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மூடைகளில் உள்ள விலாசம் இடப்பெற்ற மூடைகள் ஒருபோதும் ரேகுக்கு வரவில்லையென்று கூறினர்.

இன்னும் சில சாட்சிகளை விசாரணை செய்தபின் வழக்குத் தவணையிடப்பட்டது.

## நிருபசாரம்.

### ஏழாலைச் சைவ வாலிபர் சங்கம்.

மேற்படி சங்க ஆதரவின் கீழ் நிகழும் யுவ வருஷம் வைகாசி மாதம் 26-ம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் ஏழாலைச் சைவவித்தியாசாலை மண்டபத்தில் திரு ஐ பொன்னையா சுதேச வைத்தியர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் "சைவசமயம்" என்னும் விஷயத்தில் திரு. வே. தம்பையா உபாத்தியாயர் அவர்களால் ஓர் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அக்கிராசனரின் குறிப்புரையின் பின் கூட்டம் தேவாரபாராயணத்துடன் 9 மணியளவில் சமாப்தியாயிற்று

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்".

### மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்கம்.

### பன்னிரண்டாவதாண்டு அறிக்கைப்பத்திரம்.

இவ்வருட ஆரம்பத்தில் உள்ளூர் அங்கத்தவர்களும் பிறவூர் அங்கத்தவர்களுமாகச் சங்கத்தில் 91 அங்கத்தவர்களிருந்தனர். சென்ற வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி காரிய நிர்வாகசபையார், சங்கத்துக்கு மூன்றுப் பண உதவி செய்யாதவர்களென்றும், சங்க முன்னேற்றத்தில் சிரத்தை எடுக்க முயலாதவர்களென்றும் கண்ட 13 அங்கத்தவர்களை நீக்கிவிட்டனர். இப்போது சங்கத்தில் 78 அங்கத்தவர்களிருக்கின்றனர்.

ஏனைய வருடங்களிலும் பார்க்க இவ்வருடத்தில் அங்கத்தவர்களிற் பெரும்பாலானோர் தங்கள் தங்கள் சக்திக்கும் காலநிலைக்கும் தக்கவாறு இயன்ற பொருளுதவி செய்திருக்கின்றனர். பல சங்க அபிமானிகளும் நன்கொடையாகப் பணம் உதவினர்.

சங்க ஆதரவில் வழக்கம்போல் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும், கிராமச் சீர்திருத்த விஷயமாக ஓர் சொற்பொழிவும், ஓர் கதாப்பிரசங்கமும், 5 நாட்களாக இராமாயணப் பிரசங்கமும், அதி சிறப்பாக நடைபெற்றன. பொதுசனங்களின் நன்மைக்கும் வசதிக்குமாகக் காரிய நிர்வாக சபையார், மந்திரிமாருக்கு வெள்ளவிஷயமாகவும் மயிலிட்டி தெற்குப் பிரத்தியேகமான விதானை நியமித்தலைப்பற்றியும் இவ்விடத்தில் ஓர் வைத்தியசாலையும் உதவித் தபாற்கந்தோரும் ஸ்தாபித்தலைப்பற்றியும் விண்ணப்பப் பத்திரங்களனுப்பினர். விதானை விஷயமாகவும், வைத்தியசாலை விஷயமாகவும் அனுப்பிய விண்ணப்பங்கள் மந்திரிமாருடைய கவனத்தில இப்போதும் இருந்து வருகின்றன. வெள்ள விஷயத்தைப்பற்றி மாகாணத் தலைவரோடு ஒழுங்கு செய்ய வேண்டுமெனவும், உதவித் தபாற்கந்தோர் இப்போது இவ்விடத்திற்கு அவசியமில்லையெனவும் மந்திரிமார் பதில் அனுப்பி இருக்கின்றனர்.

1923ம் ஆண்டில் சில வாலிபரின் முயற்சியால் அற்பபொருளுதவியுமின்றித் தொடங்கிச் சைவமடத்து விறாந்தையில் நடைபெற்று வந்த இச்சங்கம், மிகச் சொற்பகாலத்தில் தன்னேக்கத்துக்கமையக் கல்விவிருத்தியை நாடிப் "பாலர் ஞானோதய சங்க வித்தியாசாலையையும்" கமத்தொழில், ஐக்கியம், பழக்க வழக்கங்கள் ஆகிய இன்ன பிறவற்றின் விருத்திக்காக "மத்திய மயிலிட்டி ஐக்கிய சங்கத்தையும்" ஸ்தாபித்து அவை யாவையும் செவ்வனே நடப்பித்து வருவது யாவரும் நன்கறிந்த விஷயம். பொது விஷயங்களிலும் சற்கருமங்களிலும் பிளவுகளும் தடைகளும் ஏற்படுவது சகசமாயினும் அவைகளை மறந்து தீமையை விலக்கி நன்மையை ஏற்று நற்கருமங்களுக்கும் நன் முயற்சிகளுக்கும் தனராஞக்கத்தைச் செலுத்த வேண்டியதே பெரியோர்கடன்.

சங்க நோக்கங்களின்படி செய்யவேண்டிய வேலைகள் பலவன. அவற்றைச் செய்து முடிப்பதற்குப் பொது சனங்களின் உதவியும் ஆதரவும் அவசியம் வேண்டும். பணக்கஷ்டமும் தொழிலின்மையும் அதிகமாகவுள்ள இக்காலத்தில் பொருள்வருவாயை விருத்தி செய்து வேலை இல்லாதோருக்கு வேலைகொடுக்கப் பன்னவேலை செய்யும் ஓர் கைத்தொழிற்சாலையை ஸ்தாபிக்கவும், பெண் மக்களுக்குக் குடும்பம் நடாத்தும் முறை, பிள்ளைவளர்ப்பு, சுகாதாரம் முதலிய விஷயங்களில் போதிய அறிவைப் புகுத்தி அவர்களையும் நன்னிலை அடையச் செய்வதற்கு அவர்களுக்குக் காலந்தோறும் பிரசங்கஞ் செய்வித்தல் அல்லது பெண்கள் சங்கம ஒன்றை ஏற்படுத்துவித்தல் ஆலய வழிபாட்டில் சனங்களை ஈடுபடச் செய்தல், நமது கிராமங்களில் நிலவிவரும் துர்க்கிருத்தியங்களை விருத்தியடைய விடாது தடைசெய்தலுமே இப்போது நம் அவசியம் கவனிக்கவேண்டியனவாகும்.

மேற்கூறிய காரியங்களை நிறைவேற்ற நம்மூர் வாசிகளையும் பிறவிடங்களிலிருக்கும் நம் ஊர் அன்பர்களையும் ஏனைய பிறரையும் வேண்டிய உதவி செய்து நமது கிராமத்தை மென்மேலும் நன்னிலை அடையச் செய்யவேண்டிய வசதிகளை அருளும்படி எல்லாம் வல்ல இறைவனை மனமார வழுத்தி வேண்டிக் கொள்ளுகிறோம்.

### விவாகம்.

சென்ற ஜூன் மாதம் 8-ம் திகதியன்று காலஞ்சென்ற ஸ்ரீ S. இராமநாதன் J. P அவர்களது பௌத்திரியும், ஸ்ரீ S R. செல்வராயனின் புத்திரியும், யாழ்ப்பாணம் 'இராமநாதன் இல்லம்' வசிக்கும் ஸ்ரீ R. C. மன்னவராயனது சகோதரியுமான ஸ்ரீமதி நேசரத்தினம் கற்பக நாச்சியாருக்கும், கழுத்துறை மின்சாரப்பகுதி மேல் உத்தியோகத்தரும், யாழ்ப்பாணம் தபாற்கந்தோரதிபராயிருந்து இளைப்பாறி யாழ்ப்பாணம் ஐக்கியவங்கியின் கௌரவ மனேஜராயுள்ள முகாந்திரம் N. முத்தையா அவர்களது புத்திரனுமான ஸ்ரீ முத்துபாலசூரியர் B. Sc G. I. E. E. அவர்களுக்குமிடையே யாழ்ப்பாணம "Chelvarayan Estate" என்னும் இல்லத்தில் விவாக ஒப்பந்தம் நிறைவேறியது. அடுத்த ஆகஸ்டில் சைவசமய முறைப்படி விவாகம் நிகழும்.

(Mis 31, 13-6-35)

## நகரசங்கத்துக்கு நாவிதரின் பெட்டிசம்.

——):×:(——

"நாங்கள் உங்கள் அடிமை குடிமைகளே."

### ஓரிடமுமில்லாத புதுவழக்கம் இங்கு ஏன்?

—o—

யாழ்ப்பாணப் பட்டினத்துள்ள நாவிதருள் 63 பேர் கைச்சாத்திட்டு, மேற்படி பட்டினசங்கத் தலைவருக்குச் சமர்ப்பித்த மனுப்பத்திரம் வருமாறு:—

"யாழ்ப்பாணப் பட்டின எல்லையுள் வசிக்கும் கீழ்கையொப்பமிடும் நாவிதர்கள் மிக்க விநயத்தோடு எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்: சில வாரங்களுக்குமுன் கூடிய யாழ்ப்பாணப்பட்டின சங்கக் கூட்டமொன்றில் நாவிதர் சௌளக்கடை விஷயமாக, மேற்படி கூட்டத்தார் நிறைவேற்றி விதித்த நிபந்தனைகளையறிந்து நாவிதர்களாகிய நாங்கள் பெரிதும் அச்சமடைந்து, அப்படியான நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு அநுமதிபெற்றுச் "சலூன்" வைத்து நடத்துவது அசாத்தியமான காரியமென்பதைப் பணிவோடு தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணத்துள்ள நாவிதர்கள் ஏனைய ஊர்களில் வசிக்கும் நாவிதர்களைப்போலில்லாமல் சந்ததிசந்ததியாக, சில குறித்த குடும்பங்களுக்கு மாத்திரம் தொழில்செய்து கொண்டுவரும் நியதியுடையவர்கள். அந்தக் குடும்பத்தினர் நாவிதர்களுக்குக் காலந்தோறும் தானியம் முதலிய பண்டங்களாகக் கூலிகொடுப்பதேயல்லாமற் காசாகக் கொடுப்பது அரிது. அப்படிக் கொடுக்கப்படும் பொருளும் போதியதல்ல. அல்லாமலும் நாவிதர்கள் புறக்கணிக்கப்பட்ட ஏழைகளாக இருக்கிறார்கள். இவர்கள் வீட்டுக்கு வீடு காலந்தோறும் போய்ப் போய்ச் சௌளஞ் செய்யும் வழக்கமுடையவர்கள். ஆனல், சிலகாலந் தொடக்கமாக, இக்காலத்துச் சீர்திருத்தங்களை உத்தேசித்து இங்குள்ள நாவிதருட் சிலர் இடையிடையே சௌளக் கடைகளாகிய சலூன்களைத் திறந்து அந்தந்த இடங்களிலே வசிக்கும் நல்லார் பெரியாரின் வசதியையிட்டு அச் சலூன்களில் தங்கள் தொழிலை நடத்திவருகிறார்கள். இப்படி நடத்தப்படும் சலூன்கள் வாயிலாகக் கிடைக்கும் ஊதியமெனிலோ மிக அற்பமானது. இத்தவிதமாகச் சலூன் வைத்துத் தொழில் செய்யும் நாவிதர்கள் தாமும் வீட்டுக்குவீடு போய்ச் சௌளஞ்செய்யுங் கிரமத்தைக் கைவிடவில்லை.

யாழ்ப்பாணத்துள்ள நாவிதர்கள் மிகவும் முட்டுப்பட்டவர்களென்பதும் மேல்சாதியாரால் தம் அடிமை குடிமைகளாக வைத்து நடத்தப்படுகிறார்களென்பதும் உலகப் பிரசித்தம்.

இலங்கை முழுவதிலும், விசேஷமாகக் கொழும்பு கண்டி போன்ற செல்வத்தோடு கூடிய பிரதான பட்டினங்களிலும் சலூன் வைத்து நடத்தும் நாவிதர்கட்கு அவ்வப் பட்டினத்திலுள்ள பரிபாலன சங்கத்தார் இப்படியான நிபந்தனைகளையும் வரிகளையும் இற்றைவரையில் விதிக்காதிருக்க, நமது யாழ்ப்பாணப் பட்டினசங்கத்தார் மாத்திரம் இவ்வாறு நாவிதர் தலையில் விதித்ததற்கு நியாயமென்ன வென்பதைப் பணிவுடன் வினவுகிறோம். இப்பொழுதுள்ள சலூன்கள் மூலமாக இப்பட்டினவாசிகளின் சுகாதாரத்திற்கு யாதும் பங்கம் வந்ததென்று ஒரு உதாரணத்தைத்தானும் உங்கள் சங்கம் எடுத்துக்காட்ட முடியுமோ என்று மிக்க விநயத்துடன் கேட்கிறோம். ஏழை நாவிதர்கள்மீதும் அவர்கள் வைத்து நடாத்தும் சலூன்களிடத்தும் வரிவிதித்த அறவிடத்துணிந்தமை பட்டினசங்கத்தின் வருவாயை அதிகப்படுத்துவதற்கு எடுத்த உபாயமேயல்லாமல் வேறொன்றுமல்ல வென்பதை நாங்கள் தாழ்மையோடு தெரிவிக்கின்றோம்.

மறுப்பண்ணும் நாவிதர்களாகிய நாங்கள் உங்கள் அடிமை குடிமைகளாக இருத்தலினல் எங்கள் தலையில் இப்படியான அநியாய வரியையும் நிபந்தனைகளையுஞ் சுமத்தி எங்களை நசித்து வருத்தி அழவைப்பது சங்கத்தவர்களாகிய உங்களுக்கு முறையல்ல.

இவ்வாறெல்லா மிருத்தலால், எங்கள் மீது விதிக்கும்படி நிச்சயித்த வரியையும் நிபந்தனைகளையும் தவிர்த்து எங்கள் கஷ்டத்தை நீக்கிவிடும்படி மேற்படி சங்கத்தாரைப் பணிவோடு கேட்கின்றோம். இப்படிச் செய்யும் உதவிக்கு நாங்கள் என்றும் நன்றியறிதலுடையவர்களாக இருப்போம்,

# தாயின் மணிக்கொடி பாரீர்.

## சிங்களர்-தமிழர் ஒற்றுமை? ஏன் இந்தப் பிரச்சினை சிங்களமக்களது நிலை; தலைவர்களின் போலிவேடம்.

## தமிழ்ச் சகோதரர்க்கோர் வேண்டுகோள்! சந்தேகம் அவநம்பிக்கையை அகற்றுமின்!

(ஸ்ரீமதி G. G. நந்தாவதி எழுதுகின்றார்)

சென்ற பிரசுரத்தில் "தேசியவாதி" எழுதிய கட்டுரைக்குப் பதிலாகவும், சிங்களப் பொதுமக்களின் உண்மை நிலைமையை விளக்குவதாயும் உள்ள இக் கட்டுரை நம்மனோரால் நன்கு வாசித்துச் சிந்திக்கப்பட வேண்டியதாகும். இச் சிங்களப் பெண்மணியின் முயற்சியை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.




சென்ற 6-6-35 இல் வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்தில் "சிங்களச் சகோதரர்க்கு ஓர் வேண்டுகோள்" என்னும் தலையங்கத்துடன் தேசியவாதி எழுதிய கட்டுரையைப் படித்தேன். அக்கட்டுரையில் "தேசியவாதி" சிறுபான்மையினர்க்கு—அதிலும் விசேஷமாகத் தமிழருக்கு—ஸ்தானங்கள் அதிகம் அரசாங்கசபையில் வழங்கப்பட வேண்டுமென்றும், பாதுகாப்புக்கள் இனி வரவிருக்கும் அரசியற்றிட்டத்தில் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

இவ்விலங்காத்தீபமானது சிங்களர் அல்லது தமிழர்க்கு மாத்திரம் சொந்தமல்ல என்பதனையும், சிங்களமக்களாகிய பெரும்பான்மையினர்க்கு இங்கு எவ்வளவு உரிமைகள் உண்டோ அவ்வளவு உரிமைகள் சிறுபான்மையினரான தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், மலாயா என்பவர்களுக்கும் உண்டு என்பதனையும் சிங்களப் பொதுமக்களாகிய நாம் எப்போதாவது மறந்தோமில்லை. நேர்மாறாக, சிறுபான்மையினராகிய ஷெ சாகியத்தார் யாவரும் இலங்காதேவியின் அருப்புதல்வர்கள், எமது உடன்பிறந்தோர்கள், என்ற எண்ணத்தையே அன்றுதொட்டின்றுவரை நாம் கைக்கொண்டுவருகின்றோம. கண்டிக் கலகம் நேர்ந்த காலத்தில் ஈனஇரக்கமின்றி நம்மவர் ஈக்களைப்போற்சுட்டுக்கொல்லப்பட்டகாலத்தில் தமிழ்ச் சகோதரர் எமக்குச் செய்த நன்றியை நாம் மறக்கமாட்டோம். நாம் நன்றிகொல்லும், சீர்திருத்தமற்ற, நாகரீகமற்ற சாதியாரல்லேம் என்பதனை எமது தமிழ்ச் சகோதரர்க்குச் சமர்ப்பித்து எமது நிலையை விளக்குவதே எனது இச் சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

உண்மையைக் கூறுங்கால் வகுப்புவாதம், தேசியவாதம் என்னும் இவ்வாதங்கள் அதிர்ஷ்டவசமாக இலங்கைவாழ் பொதுமக்களிடத்து — அவர்கள் தமிழராயினுஞ் சரி, சிங்களராயினும் சரி, முஸ்லீம்களாயினும் சரி,—இல்லை. இந்த வாதங்களைக் கிளப்புவோர்கள் சில சுயநலப் பிரியர்களே! இவர்கள் சுயநலப் பித்துத் தலைக்கேறியவர்கள். அரசாங்கசபையில் இரண்டொரு தானங்கள் அதிகமாகப் பெற்றால், அல்லது உத்தியோகங்களை அதிகமாகப் பெற்றால், அவற்றைப் பெறும் சாதியார்க்கு அணுவளவேனும் நன்மையுண்டா? இல்லையெனபதே எனது திடமான நம்பிக்கை. அரசாங்க உத்தியோகங்களினால் அல்லது சட்டசபையில் அதிக ஸ்தானங்கள் பெறுவதால் நன்மையடைந்த சாதியார் ஒருவருமில்லை. நாட்டின் உண்மையான நலன், முன்னேற்றம், கிராமப் புனருத்தாரணத்திலும், கைத்தொழில் கமத்தொழில் விருத்தியிலுமே தங்கியிருக்கிறது. இந்த உண்மையை அறியாது உத்தியோகங்களுக்கும் சட்டசபை ஸ்தானங்களுக்கும் வாதிட்டு வழக்குரைக்கும் பட்டவேட்டுவர் சிலரது செயலை என்னென்றெடுத்துரைப்பது! இவர்களின் மாய்மாலம் இருந்தவாறு என்னே?

சிங்களப் பொதுமக்களிடத்தில் வகுப்புவாதம் தேசியவாதம் என்பன இல்லையென முன்னர்க் கூறினேன் அல்லவா! அதனை மீண்டும் வற்புறுத்த விருப்புகின்றேன்! அப்படியான வாதங்களிருக்குமாயின் தமிழ்மக்கள் தென்னிலங்கையிலும், சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திலும் குடியேறி வசித்தல் அரிது. சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் யாவரும் இன்றும் பரஸ்பரம் அன்பும் விஸ்வாசமுங் கொண்டே கர்மம் ஆற்றி வருகின்றனர். இந்த அன்பும் விஸ்வாசமும் என்றும் நிலைத்திருக்கவேண்டுமென்பதுவே எனது அவா.

தமிழ்ச் சகோதரரே, ஏனைய சிறுபான்மைச் சகோதரரோ அரசாங்கசபையில் இன்னும் இரண்டொரு ஸ்தானங்களைப் பெறுவதில் எமக்கு ஆட்சேபனை யில்லை என்பதனையும், அவர்களுக்கு நியாயமான பாதுகாப்புகள் அளிக்கச் சிங்களமக்கள் தயாராயிருக்கின்றனர் என்பதனையும், சிங்களப் பொதுமக்களின் சார்பாக, அவர்கள் மத்தியிற் பிறந்து, அவர்கள் மத்தியில் வளர்ந்து, அவர்கள் மனப்பான்மையையும், அவர்கள் தமிழ்ச் சகோதரர்பால் காட்டும் சகோதரத்துவபான்மையையும் நன்குணர்ந்த யான், சிறுபான்மைச் சகோதரர்க்கு அறியத்தருகின்றேன். அரசாங்கசபையில் உள்ள சில சிங்களமக்களைக் கண்டு, அவர்களது குறுகிய நோக்கத்தையும் சுயநல விருப்பையுங் கொண்டு, அவர்களைப்போலவே சிங்களமக்கள் யாவரும் இருப்பர் என்று தமிழ்ச் சகோதர சகோதரிகள் விபரீதமாக விளங்கவொண்ணாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நெல்லினுட் பதருண்டு; தேங்காய்க்குள் ஓல்லியுண்டு; எமக்குட் சுயநலவாதிகளும் உண்டு.

ஈற்றில், நான் என் பிரிய தமிழ்ச் சகோதர சகோதரிகளுக்குச் சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பம் ஒன்றுண்டு. சிறுபான்மையினரின் நன்மைக்காகவோ, அல்லது அவர்களுக்குக் கதிமோட்சம் அளிப்பதற்காகவோ ஓர் அந்நிய ஜாதியார் பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து தம் சுகத்தையும் சிந்தியாது இங்கு வரவில்லை. அவர்கள் சுயநலங் கருதியே வந்தவர்கள். தம் நோக்கத்தைப் பூர்த்தியாக்க அவர்கள் தம்மாலான முயற்சி யாவற்றையும் செய்வர். அவற்றுள் ஒன்று பிரித்தாளுந் தந்திரம்! ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு வசதியல்லவா? எனவே, என் சகோதர சகோதரிகாள்! அவர்களது மாயவலையில் விழவேண்டாம்! உடன்பிறந்தோர்க்கிடையிற் பிணக்கு வருதல் சகஜம்; ஆனால் அவ்வுடன்பிறந்தோர பரஸ்பரம் நிலைமைக்குத் தக்கதாக அந்நியரின் உதவியை நாடுதல் அழகாமோ? அறைமின்!

நாம் பரஸ்பரம் நன்மையடையவேண்டுமானல் நமக்குள் வேற்றுமை வளர விடவொண்ணாது. நமது இலங்காதேவி இப்போது அடிமைக்குழியில் வீழ்ந்து அல்லற்படுகின்றாள். தமிழர், சிங்களர், முஸ்லீம்கள், பறங்கியர், மலாயர், வேடா என்னும் தன் சேயர்களை நோக்கித் தன் விடுதலையின் பொருட்டுப் பிலாக்கின்றாள். அப்பிரலாபம் உங்கள் காதிற் கேட்கவில்லையா?

அன்னை துயருற அரசாங்க பதவிகளுக்கு ஆசையுறும் பதவி வேட்டுவர்காள! வம்மின்! அன்னை துயரை நோக்குமின்! முன்னாள் வேற்றரசர் மதிமயங்க வைத்திட்ட வெற்றிக்கொடி வீழ்ந்துகிடக்கின்றது! அவ்வெற்றிக்கொடியைக் கையிற் கொண்மின்! அன்னையை அடிமைக்குழியிலிருந்து வெளியேற்றுமின்! மீண்டும் அவ்வீர வெற்றிக்கொடியை அவள் திருக்கரத்தில் அளிமின்! அளித்து,

"தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து வணங்கிட வாரீர்"

என்று ஜெயகீதம் பாடுமின்! வந்தேமாதரம்!

# எமாற்றப்பட்ட பெண்.

## கன்னிகை சரஸ்வதி கடத்தப்பட்ட மர்மம். | "கனகரத்தினமென்றால் விருப்புற்றிருக்கேன்."

## யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில்விசாரணை,

கல்லூரில் வசிக்கும் சரஸ்வதி என்னும் 16 வயதுடைய மங்கையை ஏமாற்றிக் கடத்திச் சென்று கற்பழித்தனர் என கந்தையா, கனகரத்தினம், சதாசிவம், குமாரசுவாமி, சபாரத்தினம், சுப்பையா என்பவர்களுக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்குச் சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் ஸ்ரீ K. ஆள்வாப்பிள்ளை அவர்கள் முன்னிலையில் மீண்டும் விசாரணை செய்யப்பட்டது. பொலிஸ் சார்ஜன்ற் அம்சா வழக்கை நடத்தினர். 2ம் 3ம் 6ம் எதிரிகளுக்காக பிறக்ரா ஸ்ரீ T. C. இராஜரத்தினம் அவர்களும் 5ம் எதிரிக்காக ஸ்ரீ R. R. நல்லையாவும் ஏற்பட்டனர்.

முதலாவதாகச் சரஸ்வதி என்னும் மங்கையே மீண்டும் விசாரணை செய்யப்பட்டாள். அவள் கூறியன வருமாறு:—

4ம் எதிரி குமாரசுவாமி மூலமாகவே நான் எனக்கு விவாகம் நடககப்போவதையறிந்தேன. கல்கமுவா ஓவர்ஸியர் தனபசிங்கத்தையே யான் விவாகம் செய்வேன் என்றே காத்திருந்தேன். இந்த எதிரிகளுடன் யான் மாகியப்பிட்டிக்குச் சென்றபோது, ஷெ தனபசிங்கத்தையே யான் விவாகம் செய்துவிட்டேன் என்று எண்ணினேன். அப்படி எண்ணாவிட்டால் யான் மாகியப்பிட்டிக்குச் சென்றிருக்கமாட்டேன்.

பிறக்ரர் குமாரசுவாமி வீட்டிற்கு ஈட்டுக்குக் கையெழுத்திடப் போகையில் 6ம் எதிரியை ஒழிந்த ஏனையோரும் என்னுடன் வந்தனர்.

"விவாக" மானபின், மாகியப்பிட்டியிலிருந்து தங்கம்மாவீட்டிற்கு 1ம் 2ம் 3ம் 6ம் எதிரிகளும் என்னுடன் வந்தனர்.

### பிறக்ரர் ஸ்ரீ T. C. இராசரத்தினத்தின் குறுக்குக் கேள்விகளும் பதிலும்.

உன் தாயும் குமாரசுவாமியும் உன் விவாக விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும் காலங்களில் அவர்களது பேச்சு உன் காதிலும் வீழ்ந்தது—ஓம்

தனபசிங்கத்தின் பேர் இப்பேச்சில் அடிபட்டது—ஓம்

தனபசிங்கத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும் நீ அவரையே மணம் செய்வது என்று நிச்சயித்துக் கொண்டாய்? இல்லையா?—ஓம்.

இங்கேபார் யாரை உனக்கு உன் தாயார் நிச்சயித்தாலும் அவரை மணஞ் செய்வது என்றுதானே யிருந்தாய்—ஓம்.

மாகியப்பிட்டிக்குச் சென்றவுடன் நீ ஏமாற்றப்பட்டாய் என்பதை யறிந்தாய்? ஆனால் அதைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லையா?

—இரண்டாம் நாள் தான் எனக்கு உண்மை தெரியவந்தது.

அப்போதும் நீ யாரிடமும் சொல்லவில்லை?—இல்லை.

தனபசிங்கம் என்று கனகரத்தினத்திற்கு உன்னை மணஞ்செய்து கொடுத்தார்கள். ஆனால் அவருடன் வல்லிபுரக்கோவிலில் நின்றபோதாவது பேசுவதற்கு நீ அவாப்படவில்லையா?—இல்லை.

எதிரி கந்தையாவுடன் எவ்விதமாகவோ நீ பிழையாய் நடந்துவிட்டாய் என்பது உன்மனதிற்குத் தெரிந்தும், நீ கனகரத்தினத்தின் மனைவியாய்ப் பின்னும் வரலாம் என்று இருந்தாய்?—இல்லை.

சார்ஜன்ற் அம்சாவின் கேள்விக்குப் பதிலாகச் சரஸ்வதி தான் இச்சம்பவம் நடக்குமுன் தான் ஒருபோதும், பெரிய பிள்ளையானபின் வீட்டைவிட்டு வெளியேறவில்லை என்று கூறினள்.

### சின்னம்மாவின் சாட்சியம்.

சரஸ்வதியின் தாயாகிய சின்னம்மா மீண்டும் விசாரணை செய்யப்பட்டாள். அவள் கூறியன வருமாறு:—

தனபசிங்கம் சரஸ்வதி விவாகம் சம்பந்தமான கடிதங்கள் யாவற்றையும் குமாரசுவாமியே வாசிப்பார்: அவரே பதிலும் எழுதினர். எனக்கு வாசிக்கத் தெரியும். ஆனால் எழுதமாட்டேன். குமாரசுவாமியே கடிதங்களை வாசித்து அவற்றின் சாரங்களைச் சொல்வார்.

இதன்பின் தங்கம்மா என்னும் மனுஷி சாட்சியம் கூறினள். வழக்கு விசாரணை 27-6-35 இற்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

செந்தமிழ்ச்செல்வர்காள்! சைவாபிமானிகாள்!

இந்துசாதனக் குழவி—உங்கள் சொந்தக் குழந்தை—புத்துருவும் புத்துயிருங்கொண்டு உங்களைநாடி ஓடிவருகின்றுள்! அவட்கு நீவிர் ஆசிகூறவேண்டாமோ? தங்கள் ஒத்துழைப்பையும் உதவியையும் கொடுக்கவேண்டாமா? உங்கள் சமயாபிமானம், பாஷாபிமானம் தேசாபிமானம் எங்கே?

தங்களால் வரவேண்டிய பாக்கியைத் தாமதமின்றித் தயைசெய்து அனுப்புமின்! ஒவ்வொருவரும் ஒவ்வோர் சந்தாதாரரைச் சேர்தது உம் சொந்தச் செல்வக் குழவியின் வளர்ச்சிக் காதரவு செய்மின்!

இப் பத்திரிகையுடன் வரும் மநுப்பத்திரத்தில் தங்கள் நண்பரின் கையொப்பத்தை இடுவித்து, அவரைச் சந்தாதாரராக்கி ஒரு வருடச் சந்தாவையும் முற்பணமாக அனுப்பிவைமின்!

உங்கள் சமயத்தின்பொருட்டு, பாஷையின்பொருட்டு, தேசத்தின்பொருட்டு இவ்வுதவியைச் செய்யமாட்டீர்களா!

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹு
வைகாசிமீ ௩௰௧ வியாழக்கிழமை.


## அடுத்த தேர்தல்.

அரசாங்கசபைப்பிரதிநிதிகளை இரண்டாமுறை தேர்தல் செய்தற்கான காலம் வருகிற நவம்பர் (கார்த்திகை) மாசமாகும். அத் தேர்தற்காலம் சமீபிக்கவே, இங்குள்ளாருட் சிலர் தாம் தாம் தனித்தனி பிரதிநிதிகளாய் வருதற்கு முயற்சி செய்யத் தொடங்கியிருக்கின்றனர். சிலமாதங்களின் முன் இந்தப் பிரதிநிதித் தேர்தலிற் சிலர் தனித்தனி முற்பட்டு நின்று பரஸ்பரம் மாறுபட்டு ஒருவரையொருவர் தூற்றியதையும் குரோதமான துண்டுப்பத்திரங்கள் வெளியிட்டதையும் ஒருவர்க்கொருவர் இடையூறு செய்யமுயன்றதையும், ஒவ்வொருவரும் தனித்தனி அதிக சிரமப்பட்டதையும் பெரும் பொருள் செலவிட்டதையும் சகோதரர்க் கிடையே பகைமை பாராட்டியதையும் நேர்விரோதமான கருமங்களை இவர்கள் ஆற்றத் தொடங்கியமையையும் எல்லாரும் அறிந்திருப்ப, இவைகளெல்லாம் இப்படி முற்பட்டு நின்றால் இவர்கள் கூட்டாளிமார் முதலியோரின் ஞாபகத்திலுள்ள புதியனவாய் இன்னுமிருப்ப, “மாண்டவர் மீண்டும் மீண்டும் மாள்வரோ மதியிலாதாய்” என்றபிரகாரம் இந்த இரண்டாம் முறையும் இப்படிச் சிலர் முற்பட்டு நின்று தாமும் இடர்ப்பட்டுப் பிறரையும் இடர்ப்படுத்தி, ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் மக்களுக்கிடையில் வேற்றுமையை மூட்டிவிட நினைக்கலாகுமா? பஞ்சமாபாதகங்களுள் நடுநாயகமாக விளங்கும் மதுபானத்தைக் கொண்டு தக்காரைத் தகவிலர் வெல்லவிடலாமா? இந்நாட்டின் நன்மைக்காகிய கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் கல்விமுறை என்னுமிவைகளைச் சீர்திருத்தி அபிவிருத்தி செய்வதற்குப் பிரதான ஆதாரமான பணம் இல்லாமையால் ஒன்றுஞ்செய்ய முடியாமலிருக்கும் இந்த ஆபத்தான சமையத்தில் இத்தேர்தல் எதிரிடையின் பொருட்டு இங்குள்ள சனத்தலைவரெனப்படுவோர் அநியாயமாகப் பணத்தைச் செலவிடுதல் புத்தியின் பாற்படுமா? சென்ற தேர்தற் காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கிடையே அத்தேர்தல் காரணமாக எழுந்த வேற்றுமை இன்னமும் ஒழிந்தபாடில்லையே! உண்மையான தேசாபிமானிகள் இப்படிப்பட்ட விஷயங்களையல்லவா முதற் சிந்திக்கவேண்டும்.

இப்படியெல்லாம் நாம் கூறுவதைக் கொண்டு, பழைய சனப்பிரதிநிதிகள் நால்வரும் இருந்தபடியே இருக்கட்டுமென நாம் வாதிக்கின்றோமென்று எம்மை விபரீதமாக விளங்கிக்கொள்ள வொண்ணாது. இப்பொழுது தமிழ்மக்களுக்கு நேர்ந்துள்ளதாகிய ஆதாரமற்ற நிலைமையை உத்தேசிக்கும்போது, தமிழ்மக்களும் அரசாங்கசபையைப் புறக்கணித்தலைவிட்டு அதிற் பங்குபற்ற வேண்டிய நிலைமையிற்றான் இருக்கிறார்களென்பது புலப்படும். ஆதலால் நாம் சொல்வது இந்த நான்கு பிரிவிலுள்ள சனங்களுள் அவ்வப்பிரிவில் வசிப்போர் நடக்கவேண்டிய கருமங்களை முந்தியேநன்கு அறிந்து கூட்டங்களைக் கூட்டி அக் கூட்டங்களில் இன்னின்னாரைத்தான் தங்கள் பிரதிநிதியாக அனுப்புவது என்று நிச்சயித்து அப்படியே அனுப்பிவைத்தலே புத்தியாகுமென்பதாம். இந்த உபாயத்தைச் சொல்வது எழுதுவது இலகு. இவ்வுபாயத்தின்படி செய்வது அவ்வளவு இலகுவல்ல என்பது மெய். ஆனாலும் இப்படிச் செய்தற்குச் சனத்தலைவரென் நிற்போர் பழக்கிவிட்டால், சனங்களும் பழகிக்கொண்டால் தமிழ்மக்களாகிய எங்களுக்கு அசாத்தியமான கருமம் எவ்வயுமில்லை என்பது நிசம்.

### 15 ரூபா அபராதம்.

ஆசை பொன்னுத்துரை என்னும் ஒருவர் தனக்குரிய பஸ்ஸில் 3 பிரயாணிகளை மேலதிகமாக ஏற்றினர் என்ற குற்றத்தின் பேரில் 15 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

### தமிழ்மக்களது கடமை.

இன்னும் ஓர் ஆறுமாத காலத்தில் அரசாங்கசபைக்கு எம் பிரதிநிதிகளை அனுப்புதற்கான பொதுத்தேர்தல் நிகழப் போகின்றது. தேர்தல் முடிந்தபின் அமைக்கப்படும் சபையில் மிகவும் முக்கியமான பிரச்சினைகள் வரவிருக்கின்றன. அப்பிரச்சினைகளை எவ்வாறு கையாளவேண்டும், பொதுவாக இலங்கையர்க்கும் சிறப்பாகத் தமிழ்மக்கட்கும் பாதகம் விளைக்காதவண்ணம் இப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம், என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி நம் பிரதிநிதிகளாய்வர அபேட்சிப்பவர்களும், பொதுஜனங்களும் அறிந்திருத்தல் நன்றும்.

இப்போது அமுலில் உள்ள டொனமூர் அரசியல் நூதனமானது பிற்போக்கானது என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். இந்த அரசியல் இங்கு வந்ததன் பயனாகப் பதவிகளும் அதிகாரங்களும் பெற்றுள்ள ஒரு சாராரும் இவ்வரசியல் சில விஷயங்களிற் பிற்போக்கானது எனக்கூறி,த் தமக்கு விருப்பில்லாத சில அம்சங்களை நீக்க முயற்சி செய்கின்றனர்.

சிங்களத் தலைவர்கள் தமக்கு விருப்பற்ற சில அம்சங்களை நீக்க முனைந்து நிற்கின்றனர். இவர்கள் சிறுபான்மைச் சாதியத்தினரான தமிழர், முஸ்லிம்கள் என்பவர்களின் ஒத்துழைப்பை நாடவில்லை. சிறுபான்மையினர் அவர்களிலும் விசேஷமாகத் தமிழ்மக்கள் மனமுவந்து அளித்த ஒத்துழைப்பையும் நிராகரித்து விட்டனர். எனவே சிங்களமக்கள் அரசியல் திட்டத்தில் மாற்றம் வேண்டுமென இப்போது நிற்பது சிறுபான்மையினருக்குச் சந்தேகத்தை விளைத்திருக்கின்றது. எந்த அரசியல் திட்டம் அமுலில் இருந்தாலும், அதில் தமக்குச் சில உரிமைகள் இருத்தல் வேண்டுமெனச் சிறுபான்மையினர் கேட்கின்றனர். அவர்களின் கேள்வி நியாயமானதே, அப்படி அவர்கள் கேட்பதற்குத் தாங்கள் இதுகாறும் ஆற்றிவந்த கர்மங்களே காரணம் என்பதைச் சிங்களத் தலைவர்களே ஒத்துக்கொள்வர். சிங்களத் தலைவர்கள், இலங்கைக்கு உண்மையான சுவயாரச்சியத்தை விளைபவர்களானால் அவர்கள் சிறுபான்மையினரின் உதவியை நாட வேண்டும். சிறுபான்மையினரின் சந்தேகமும் அவநம்பிக்கையும் ஒழிவதற்காக, அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்தல் வேண்டும்.

சிங்களமக்கள் கேவலம் சுயநல வாஞ்சையினால் வகுப்புவாதத் திமிர் கொண்டு கர்மம் ஆற்றுகின்றார்கள். அதன் பொருட்டு நாங்களும் தீவிர வகுப்புவாதிகளாய் நின்று எமது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிட வொண்ணாது என்பதனை மீண்டும் வற்புறுத்துகின்றோம். எமது லட்சியத்தை அடைவதற்காக, தேசம் முன்னேறுவதற்காக, இலங்கைவாழ் சகல சமூகத்தினருடனும் ஒத்துழைக்க எம்மாலான மட்டும் முயற்சி செய்தல் வேண்டும். எமது சொந்த நலன்களைப்பாதுகாப்பதாயும், தேசம் முழுவதிற்கும் நன்மையளிக்கக் கூடியதாயுமுள்ள ஓர் அரசியற் திட்டத்தை வகுப்பதில் நாம் பின்னிற்க வொண்ணாது. பிரித்தாளும் தந்திரமுடையார் விரிக்கும் மாயவலையிற் சிக்கவொண்ணாது. எமக்குக் காரியம் தேவையின்றி வீரியம் பேசுதல் இப்போது தேவையில்லை, எமது லட்சியத்தைப் பூர்த்தியாக்கத்தக்கவர்களையே நாம் எமது பிரதிநிதிகளாய் அனுப்புதல் வேண்டும்.

## இலங்கைத் தமிழர் இந்தியரல்லர்.

—:o:—

### பாகுபடுத்தலில் ஆட்சேபம்.

சிலாங்கூர் இந்திய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் ஒன்று சென்ற 2-ம் தேதி கூடியது. அப்போது நகரசங்கம், சட்டசபை என்னும் ஸ்தாபனங்களுக்கு இந்தியப் பிரதிநிதிகளை அரசினர் நியமிக்கும்போது இந்தியர்களையே நியமிக்கவேண்டும் அன்றி ஏனையோரை நியமிக்க வொண்ணாது என்று அரசினரைக் கேட்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரை, இந்தியர்களுடன் சேர்த்துக் கணக்கிடுவதை சிலாங்கூரில் உள்ள இந்தியச் சங்கம் பலமாக ஆட்சேபிக்கின்றது என்னும் ஓர் தீர்மானமும் நிறைவேறியது

## கண்ணோட்டம்.

### மலாய்நாட்டில் இலங்கைத் தமிழர்.

ஓடம் வண்டியில் ஏறும், வண்டி ஓடத்தில் ஏறும் என்று காடோடியாய் ஓர் பழமொழி கூறுவார்கள். அதன் உண்மை மலாய் நாட்டில் வசிக்கும் இந்தியர், இலங்கைத் தமிழர் என்னும் இரு பகுதியார் விஷயத்திலும் வெளியாய்விட்டது. மலாய் நாட்டிற்கு உத்தியோகார்த்தமாக நம்மவர் சென்ற அந்தக்காலத்தில், அங்குவந்து குடியேறிய இந்தியர்களோடு இவர்கள் அநேகமாய் உடாடுவதில்லை உத்தியோகத்திலும், ஆசாரானுட்டானங்களிலும் தாம் அக்காலம் குடியேறியுள்ள இந்தியர்களிலும் பார்க்க மேம்பட்டவர் என்று நம்மவர் பெருமிதமுற்றிருந்தனர். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது என்பதனை மலாய்நாட்டு செலாங்கூர் இந்தியர் சங்கம் செய்த தீர்மானத்திலிருந்து நன்கு அறியலாகும். அச்சங்கத்தின் சென்ற வருடாந்தக்கூட்டத்தில், நகரசங்கம், சட்டசபை முதலாம் ஸ்தாபனங்களுக்கு இந்தியரின் பிரதிநிதிகளாய் இந்தியர்களையே அரசினர் நியமித்தல் வேண்டும் என்றும், இந்தியர்களுடன் இலங்கைத் தமிழரையும் சேர்த்துப் பொதுவாக இந்தியர் என்று அழைப்பதைத் தாம் ஆட்சேபிக்கின்றனர் என்றும்: இரு நிர்ணயங்கள் நிறைவேற்றியுள்ளனர்! என் செயலாம்! அக்காலத்தில் கிள்ளாங்கிக்காரர் என நம்மவரால் வெறுத்தொதுக்கப்பட்ட இந்தியர் தம் வரிசையில் இலங்கைத் தமிழரை வைக்கவேண்டாம் என ஆட்சேபிப்பது கால வித்தியாசத்தின் பயனன்றி வேறென்ன?

### முசோலினியின் ஆக்கிரமம்.

இற்றலி—அபிஸீனியத் தகராறுவிஷபமாக இங்கிலாந்து இற்றலிக்குமாறாகக் கர்மம் இரகசியமாக ஆற்றுகின்றது என்ற வதந்தி இப்போது சிலகாலமாக இற்றலியில் உலாவுகிறது: எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளுவதால் தமக்கு எவ்வித பயனும் இல்லையென்றும் இத்தகராறில் தாம் சமாதானத்தையே விளைக்கப்பாடுபடுகின்றர் என்றும் மிஸ்டர் அந்தோனி ஈடன் பாராளுமன்றக் கூட்டத்திற் கூறியமைகாதும் இற்றலிய மக்கள்காதிற் படவில்லை. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று தேன்கொட்டப் பேசும் சுபாவம் பிரிட்டிஷாருக்குண்டென்பதே இற்றலிமக்களின் தற்போதய அபிப்பிராயமாயிருக்கிறது. பிரிட்டிஷார் தமது சொந்தவிஷயத்தில் தலையிடுவது அடாது என்னும் கருத்துப்பட இற்றலியச் சர்வாதிகாரி நேற்றைய முன்தினம் ஓர் கூட்டத்திற் சுட்டாமற்சுட்டிக் குறிப்பிட்டமையை நாம் கூறுதிருக்க முடியாது. “தங்களுடைய ஏகாதிபத்தியம் ஒன்றைப் பாதுகாப்பதாக விருந்தால், அப்பொழுது உலக அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தத் தேவையில்லை. இத்தலியின் செய்கையைமாத்திரம் கண்டிக்கக் கிளம்பி விடுகின்றனர்.” என்று அவர் கூறியிருக்கின்றார். ஐரோப்பிய வல்லரசுகள் ஒவ்வொன்றும் இதேநிலைமையில் இருக்கின்றன. எல்லாரும்பிறர்க்கு உபாத்தியாயர்கள்! தங்கள் விஷயத்தில் யதேஷ்டமாக நடக்கலாம்: இதனால்தான் இவ் வல்லரசுகளைக்கொண்ட சர்வதேச சங்கம் செயலற்றதாய் ஓர் விகடநாடகமெனவும் ஸ்ரீ ஜெகத்சுபாஷ் சந்திரபோஸ் அன்று கூறியபடி கொள்ளைக்காரர் கூட்டமாயும் இருக்கிறது”

### தமக்கும் வேண்டுமாம்.

சென்ற திங்கட்கிழமை இலங்கை நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் 8வது வருடாந்தக் கூட்டத்தில் நாட்டுக்கோட்டைச்செட்டியார்களின் நன்மைகள் பாதிக்கப்படாமலிருப்பதற்காக அரசாங்கசபை நகரசங்கங்கள் அரசினர் வங்கி என்னும் ஸ்தாபனங்களில் அவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படல்வேண்டும் என்று ஓர் நிர்ணயம் நிறைவேறியது செட்டியார்கள் இவ்வாறு தம் நன்மைகளின் பொருட்டு ஸ்தானங்கள் கேட்பதை நாம் ஆட்சேபிக்கின்றோமில்லை. ஆனால் இதுகாறும் இச்செட்டிப்பிள்ளைகளுக்கு எந்தத் தாபனங்களிலாயினும் பிரத்தியேக ஸ்தானங்கள்ஒதுக்கிவைக்கப்படவில்லை. அதன்பயனாக அவர்கள் அடைந்த தீமைகள்தான் என்னையோ என்று நாம் கேட்கிறோம்.

## மகளைக்கொடாமையால் மரணம்

### தெல்லிப்பழை நாகலிங்கத்தின் கொலை.

### மல்லாகத்தில் வழக்குவிசாரவண விபரம்.

[நமது நிருபர்.]

தெல்லிப்பழையைச் சேர்ந்த வல்லிபுரம் நாகலிங்கம் என்னும் தட்டாரவகுப்பினரை, காசிப்பிள்ளை இராசையா, முருகேசு கந்தசாமி என்னுமிருவரும் கொலை செய்தனரென்று குற்றம் சாட்டப்பட்ட வழக்கு மல்லாகம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுகாறும் மறைந்து இருந்த எதிரிகள் அச்சுவேலி விதானையாற் சிறையாய் நீதிஸ்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டனர்.

இது சம்பவம் நடந்த தினத்தன்று காலை தான் தன் வீட்டில் இருந்து வரும்போது இந்த இரு எதிரிகளும் நாகலிங்கத்தைத் தாக்குவதைத் தான் கண்டதாகவும், 2-ம் எதிரி பிடிக்க முதலாம் எதிரி நாகலிங்கத்தை ஓர் கண்டகோடலியால் வெட்டினார் என்றும் அயலவர் ஒருவர் சாட்சியம் கூறினார்.

இதன்பின் நாகலிங்கத்தின் மகள் அன்னம்மா என்னும் மங்கை பின்வருமாறு சாட்சியம் கொடுத்தாள்:—

“முதலாம் எதிரியின் சகோதரனுக்கு என்னை விவாகஞ்செய்து கொடுக்க என் தந்தை விரும்பாதபடியால் இவ்வெதிரிகள் அவர்மீது கோபங் கொண்டிருந்தனர். முதலாம் எதிரியின் சகோதரனும் வேறு இருவரும் என்னைப் பலாத்காரமாகத் தூக்கிச் செல்ல இருந்ததை அறிந்த என் தந்தையார் அவர்கட்கெதிராக வழக்குத் தொடர்ந்தார். ஒருவாறு கலியாணத்தை ஒப்பேற்றி வழக்கைச் சமாதானமாக்க இவ்வெதிரிகள் தம்மாலானமட்டும் முயற்சித்தனர்; ஆனால் வாய்க்கவில்லை. இக்கொலை நடந்த வன்று காலை என் தந்தையார் வீட்டிலிருந்து தோட்டத்துக்குச் சென்றார். உடனே அடுத்த வீட்டில் இருந்த இந்த இரு எதிரிகளும் அவரைப் பின்தொடர்ந்தனர். முதலாம் எதிரி கையில் ஒரு கண்டகோடரியை வைத்திருந்தார். சிறிது செல்ல ஒழுங்கைப் பக்கத்திலிருந்து சத்தம் கேட்டது. நான் ஓடிச் சென்று பார்க்கையில் இரத்தவாறுபெருகளாய் தந்தை கீழே கிடந்தார். எதிரிகள் ஓட்டம் பிடித்தனர்”

இன்னும் சில சாட்சிகளை விசாரணை செய்தபின்னர் நீதிபதி விசாரணைப் பிரதிகளைக்கொழும்பு “அட்டேர்னி ஜெனரலுக்கு” அனுப்பும்படி உத்தரவிட்டார்.

## உள்ளூர்ச் செய்திகள்

(நமது நிருபர்.)

### புகைரதஸ்தானத்துக் களவு.

யாழ்ப்பாணம் புகைரதஸ்தானத்து "குட்ஸ்ஷெட்டில்" களவுபோன பொருள்களில் ஒருபெட்டி பிறண்டியும் ஒரு பெட்டி ஜின்பானமும் அப்படியேஉடைக்காமல் புகைரதப்பகுதிக் கம்பித்துரையின் காரியாலயத்திற்குப் பின்னூற் கண்டு பிடித்து எடுக்கப்பட்டன. இவை எப்படிவந்தன என்பதைப்பற்றிப் பொலிசார் விசாரணைபுரிந்து வருகின்றனர்.

### தட்டாதெருவிற் கலகம்.

வண்ணார்பண்ணைத் தட்டாதெருச்சந்தியில் சென்ற 10-6-35 பிற்பகல் 3½ மணியளவில் S சின்னப்பொடியன் N. செல்லப்பா என்னும் இருவரும் V. நாகலிங்கம் என்பவரைப் பொல்லினால் அடித்துக் கலகம் செய்தனர் என்று சென்ற செவ்வாய்க்கிழமையன்று வண்ணார் பண்ணை பொலிஸ்விதானை ஸ்ரீ T. கவரத்தினம் அவர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டனர். வழக்கு தவணையிடப்பட்டிருக்கிறது.

### துவிசக்கரக்கள்வனும்.

இ. அந்தோனிப்பிள்ளை என்பவன், T. மயில்வாகனம் என்பவர்க்குரிய 4475௳ இலக்கத் துவிச்சக்கரவண்டியை யாழ்ப்பாணம் புகையிரதஸ்தானத்திலிருந்து களவாடி, ஒரு முஸ்லீம் வியாபாரிக்கு 25ரூபாவுக்கு விற்றான் என்று சென்ற செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாணம் பொலிஸ்நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டான். நீதிபதி எதிரியை 100 ரூபாப் பிணையில் விடுதலை செய்து வழக்கைத் தவணையிட்டார்.

### பரிசோதகரைத் தடுத்தவர்க்கு 5 ரூபா.

பொலிஸ் உதவிப் பரிசோதகரான மிஸ்டர் D. H. R. A. கொற்யா அவர்கள் தெருவாற் செல்லும்போது, தனதுபஸ்ஸை நிற்பாட்டி அவரது ரதத்திற்குத் தடைவிளைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ரூபசிங்கி என்னும் சிங்களவன் 5 ரூபா அபராதம் சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விதிக்கப்பட்டான். தன்னை அடித்தார் என்று ரூபசிங்கி பொலிஸ் பரிசோதகர் மீது தொடர்ந்த வழக்குத் தள்ளுப்பட்டது.

### யாழ்ப்பாண அரசினர் ஆசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கம்.

தமிழ்க்கல்வி அபிவிர்த்தியையே இலக்காய்க்கொண்டு வித்தியாதரிசியாயும், யாழ்ப்பாண ஆசிரிய கல்லூரித் தலைவராயுங் கடமை பார்த்து, வருகிற ஆவணிமாசத் துடனிளைப்பாற விருக்கும் திரு. அ. பொன்னையா அவர்களின் ஞாபகார்த்த நிதிக் காரியதரிசியாக, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. V. வீரசிங்கமவர்களும் பழைய மாணவர்சங்கக் காரியதரிசியாக திரு. க. ஆறுமுகம் ஆசிரியரவர்களுஞ் சங்கத்தவரின் வேண்டுகோட் கிசைந்து பணியாற்றுகின்றனர். பழைய மாணவர்களும், நன்மை விரும்பியவர்களுமாயிதனை ஆதரித்துப் பணமுபகரிக்க விரும்புவோர் ஆடிமாசம் 7-ந் தேதிக்கு முன்னர் அவ்வக் காரியதரிசிகட்குத் தாங்க ளுபகரிக்கும் பணத்தையனுப்பிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படியும், நன்றியறிதலுடன் அவரது மாணவர்களால் இயற்றப்பட்டனுப்பப்படும் பாக்களங்கீகரிக்கப்படு மெனவும், ஆவணிமாசம் 3-ந் தேதி பிரிவுபசாரக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளும், ஆடிமாச முற்கூற்றிற் கருமத் தலைவர் கூட்டங்களும் நடைபெறுமெனவும் மேற்படி சங்க அங்கத்தவர் அறிவிக்கின்றனர்

### குருநாகலில் மரணவிகிதம்.

குருநாகலில் சாதாரணமான மற்ற மாதங்களிலும் பார்க்கச் சென்ற மே மாதத்தில் இரண்டு மடங்கு மரணங்கள் சம்பவித்திருக்கின்றன என்று வடமேன்மாகாணத் தலைவர் தமது பரிபாலன அறிக்கையிற் குறிப்பிடுகின்றார்.

மேமாதம் முழுவதும்வரையில் கஷ்டநிவாரணத்தின் பொருட்டு 633,620 ரூபா இப்பகுதியிற் செலவிடப்பட்டிருக்கின்றது.

## இந்திய அரசியற் குறிப்புக்கள்.

### போகவேண்டாம்.

காங்கிரஸ் தலைவரான பாபு இராஜேந்திரப் பிரஸாத்தும் காரியதரிசிகளான ஆச்சார்ய கிருபாளினியும் ஸ்ரீஜுகத் ஜெபராமதாஸும் குவெற்றுவுக்குச் செல்ல அநுமதி கோரி அரசினர்க்கு அனுப்பிய தந்திக்குப் பதிலாக காங்கிரஸ் தலைவர்க்கு அரசினர் பின்வரும் கடிதத்தை அனுப்பியிருக்கின்றனர்: "தனிப்பட்டவர்கள் குவெற்றுவிற்குப் போகவொண்ணாதென இந்திய அரசினர் உத்தரவிட்டிருக்கின்றனர். அவ்வுத்தரவுக்கான காரணங்களை விளக்கி அரசினர் இப்போதுதான் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதைத் தாங்கள் அவதானத்துடன் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன் குவெற்றுவில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கும் பீகார் நிலைமைக்கும் வித்தியாசமிருக்கிறது. குவெற்றுவுக்கு ஒருவர் அதிகமாகச் சென்றாலும் அங்கு கஷ்ட நிவாரண வேலை செய்பவர்க்கு அதிக கஷ்டம் ஏற்படும். குவெற்றுவில் உள்ள வசதிகளைக்கொண்டே அங்கு ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க அரசினர்க்குச் சௌகரியங்களிருக்கின்றன".

### தொழிலாளர் தலைவர் வெளியேற்றம்.

பம்பாயில் தொழிலாளர் தலைவரான ஸ்ரீமான்கள் காடேயும், தேஷ்பாண்டேயும், பம்பாயிலிருந்து முறையே சத்தாராவுக்கும், ஆமத் நகருக்கும் வெளியேற்றப்பட்டனர். ஸ்ரீமான் காடே சத்தாரா நகர எல்லையைத் தாண்டக்கூடாதென்றும், ஸ்ரீமான் தேஷ்பாண்டே ஆமத் நகர் எல்லையை விட்டு வெளியேறவொண்ணாது என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### 50 நாட்களாக உண்ணாவிரதம்.

பர்மிய யுவர் சங்கத்தைச் சேர்ந்த பிரபல தலைவரான தாகின் ஹலமாங் மத்திய பர்மாவிலுள்ள டாங்கு சிறைக்கூடத்தில் 6 மாத வெறுங் காவல் தண்டனையை அனுபவித்து வருகிறார். அவர் தம்மை பி. வகுப்புச் சிறையாளராக நடத்துவதை ஆட்சேபித்து 50 தினங்களாக உண்ணாவிரதமிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இவர் ஒரு கடிதமெழுதி தபாலில் போட்டதாகவும் அதில் ஒட்டிய முத்திரையில் இருந்த அரசரது உருவப்படத்தைச் சிதைத்து அவமரியாதையான வார்த்தைகளை எழுதி யிருந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார் இவர் நீதிஸ்தலத்திற் குற்றவாளி எனக் கண்டு தண்டிக்கப்பட்டவர்

### ஹரிஜனப் புரோகிதர்.

ஸ்ரீமான் பாஜி கிருஷ்ணராவின் புல்வர்களான ஸ்ரீமான்கள் ஆனந்தராவ், மாதவராவுக்கு உபநயன முகூர்த்தமும் வேதாரம்பமும் சென்ற திங்கட்கிழமை ஜேம்ஷெட் மண்டபத்தில் நடந்தது. அப்பொழுது பண்டித அடிபுடி சோமநாத ராவ் புரோகிதராக இருந்தார். முன்பு ஹரிஜனராயும் இப்பொழுது த்விஜராயும் இருக்கும் ஸ்ரீமான் முடிகொண்டா வெங்கடசாமி உதவிப் புரோகிதராக இருந்து, வேத மந்திரங்கள் கூறி உபநயனத்தை நடத்திவைத்தார். இதற்கப்புறம் ஸ்ரீமான் பி. கேசவ் வீட்டில் 300 புருஷர்களுக்கு சமபந்தி போஜனம் நடந்தது. அப்பொழுது பல ஹரிஜனங்களும் வந்திருந்தனர்.

### வெயிலின் கொடுமை.

சென்ற வாரம் லக்ஷ்மணபுரியில் வெப்பக் காற்றினால் 11 பேர் இறந்தனர். லாகூர் எக்ஸ்பிரஸில் பிரயாணஞ்செய்து வந்த பிரயாணிகள் பலர் புகைரத ஸதானத்தில் அசௌக்கியமுற்றனர். வைத்திய உதவி வருமுன்பே அவர்கள் இறந்துபோய்விட்டார்கள். லக்ஷ்மணபுரி நகர புகைரத தானத்தைவிட்டு இறங்கிய 5 பிரயாணிகள் குளிர்ந்த பானங்களைப் பருகினர். உடனே பிரக்ஞையை இழந்தார்கள். அவர்களில் 3 பேர் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டனர். 2 பேர் வைத்தியசாலையில் இறந்தனர். மேஜர் பாங்க்ஸ்ரோடு வழியாக 2 பேர் நடந்துகொண்டிருக்கும் பொழுது சூரிய வெப்பம் தாங்காமல் சௌலாக்கி என்றவிடத்திற்கு அருகில் இறந்தனர். மங்கி பிரிட்ஜ் சந்திப்பிற்கருகில் ஒருவர் இறந்துபோனார். அர்ச்சுனநகரில் மற்றொருவர் உயிரை விட்டார். கிராமங்களில் ஒரு வார காலத்தில் சூரிய வெப்பம் தாங்காமல் 100 பேர் வரை தேக அசௌக்கியமுற்றதில் 70 பேர் இறந்துபோயினர்.

## உலக அரசியற் போக்கு

"அரசியல்வாதி" எழுதுவது.

உலக அரசியல் விஷயமாகச் சொல்லுமிடத்து, பிரிட்டிஷ் மந்திரிசபை மாற்றமே இப்போது சர்வரதும் மனத்தைக் கவர்ந்திருக்கிறது எனலாம்: மந்திரி சபையில் மிஸ்டர் பால்டுவின் பிரதம மந்திரியானது பிரதானமான மாற்றம் மிஸ்டர் பால்டுவின் கன்ஸர்வேற்றிவ் கட்சியினரைச் சேர்ந்தவர்: அக்கட்சியினரே இப்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். எனவே மிஸ்டர் பால்டுவின் பிரதமமந்திரியாய் வந்தமையினால் மிஸ்டர் மக்டோனல்டுக்கு நேர்ந்த தொல்லைகள் இனிக் கிளம்பாவென்று உறுதியாக நம்பலாம்.

* * *

பாவம் மிஸ்டர் மக்டோனல்டு! கேவலம் சுகவாழ்வை ஒன்றினையே அகத்துட்கொண்டு, தனது உந்நதக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து, மேன்மையான லட்சியங்களைத் துறந்து பிரதமமந்திரியாய்ச் சென்ற 4 வருடகாலமாகக் கன்ஸர்வேற்றிவ் கட்சியினரின் கீழ் இருந்து பட்ட அவமானம் எல்லாம் போதும்! அவர் இப்போது, மிஸ்டர் பால்டுவின் வகித்திருந்த கவுன்ஸில் தலைமைப் பதவிக்குச் சென்றிருக்கிறார். ஆனால் அவர் அதில் அநேககாலம் தங்கி நிற்பாரோ என்பது சந்தேகமே. எனவே சுகவீனம் என்னும் காரணத்தைக் கொண்டு அவர் தம் பதவியை இராஜிநாமாச் செய்தாலும் ஆச்சரியமல்ல அப்படியின்றி அப்பவியை இறுகத் தழுவிப் பிடித்தாலும், அவர் இன்னும் சில மாதங்களில் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் அபேட்சகராய் நின்று வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்திற்கு மீண்டும் வருவரோ என்பது மிகச் சந்தேகமே!

* * *

இதுகாறும் மந்திரியாயிருந்து இந்திய அரசியல் மசோதா என்னும் பெருங் கல்லைப் பாரதமக்கள்மேற் சுமத்தக் கங்கணம் கட்டி ஒருவாறு வெற்றி பெற்ற சேர் சாமுவல் ஹோர் தமது பதவியினின்றும் விலகி அந்நியநாட்டு மந்திரியானார். அப்பதவியிலிருந்த சேர் ஜோன் சைமன் இப்போது உள்நாட்டு மந்திரியாய் விட்டார். எனினும் அவர் ஓர் பிரபல நியாயவாதியேயன்றி, அரசியல்வாதியன்று என்பதைப் பிரிட்டிஷார் உணர வேண்டிய காலம் சமீபித்துவிட்டது என்று திடமாய்க் கூறலாம்.

* * *

சேர் சாமுவல் ஹோர் வகித்திருந்த இந்திய மந்திரிப் பதவி செற்லாந்துப் பிரபுவுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவர் வங்காளத்துத் தேசாதிபதியாயிருந்தவர். முந்நாள் இவர் இந்திய சுவதந்திரத்திற்கு மாறானவர் என்பது பிரசித்தம். எனினும் தற்போது அளிக்கப்படவிருக்கும் இந்திய அரசியற் சீர்திருத்தத்திற்கு ஆதரவாகப் பலமுறை பேசியிருக்கிறார். சேர் சாமுயல்ஹோர் இந்திய விஷயமாக எக்கொள்கையை அனுசரித்தாரோ, அதே கொள்கையையே தாமும் அநுசரிக்கப் போவதாக, மந்திரிப்பதவி ஏற்றதும் செற்லாந்துப் பிரபு புகன்றிருக்கிறார் அக்கொள்கையை செற்லாந்துப் பிரபு அநுசரிக்க வேண்டிய காலம் மலையேறி விட்டது. இந்திய மக்கள் அரசியற்றிட்டத்தை ஏற்று நடாத்த வேண்மானால் ஹோரின் கொள்கை மாற்றப்படுதல் வேண்டும். பரந்த நோக்கம் நிலவுதல் வேண்டும். செற்லாந்துப் பிரபு அநுபவத்தினாலேனும் பாடம்படிப்பாரா?

* * *

எமது குடியேற்ற நாட்டு மந்திரியாய் இருந்த ஸேர் பிலிப் கன்லிப் லிஸ்டர் என்னும் மேதாவி ஆகாயவிமானப்பகுதி மந்திரியாய் விட்டார். மிஸ்டர் ரும்சே மக்டோனல்டின் புதல்வன் மல்கோம் மக்டோனல்டிற்கு அநப்பதவி இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது. தந்தைக்கு நேர்ந்த கீழ்நிலையைச் சமாளிப்பதற்காக இப்பதவி மகனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்று அரசியல்வாதிகள் புகல்வர். மிஸ்டர் மல்கோம் வாலிபர்: தொழிற்கட்சியைச் சேர்ந்திருந்து தந்தையுடன் பின் அக்கட்சிக்குத் துரோகம் செய்தவர் குடியேற்ற நாட்டு மந்திரிப் பதவியில் மாற்றம் நிகழ்வதால், எமக்கு ஏதும் நன்மைகள் நேரும் என்று காத்திருக்கவொண்ணாது. பிரிட்டிஷார் பிரிட்டிஷாரே! அடிமை நாடுகள் விஷயத்தில், அவர்கள் உண்மையான அறநாடங் கொண்டவர் என்று எவரும் புகல முன்வாரார். பிரிட்டிஷாரின் சொந்த நன்மைக்குப் பாதகமான எதிலும் அவர்கள் ஒருபோதும் சலியிடார்.

* * *

ஜெர்மனி, மகாயுத்தம் முடிந்தவுடன் வெற்றியுற்ற வல்லரசுகளால் நசிக்கப்பட்டது. வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை என்னும் கல்லு அதன் கழுத்தில் மாட்டப்பட்டது. அதன் அந்நியதேச நாடுகள் யாவும் பறிமுதலாய் வெற்றியுற்ற வல்லரசுகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. இப்போது புத்துயிர் கொண்டு, மேற்படி அநியாய உடன்படிக்கையைத் தகர்த்தெறிந்த ஜெர்மனி தன்னிடம் இருந்து பறிக்கப்பட்டநாடுகளை மீண்டும் தன்னிடம் ஒப்புவிக்கும்படி கேட்கிறது. ஆனால் அவற்றைத் தற்போது வைத்திருக்கும் வல்லரசுகள் மீண்டும் மனமுவந்து ஜெர்மனியிடம் கொடுத்துவிடுமா? எனினும் ஜெர்மனியும் இதுவிஷயத்திற் பிடிவாதமாய் இருக்கிறதுபோலத் தெரிகிறது. இதன் காரணமாக யுத்தமொன்று ஐரோப்பாவில் மூளுமா?

* * *

இங்கிலாந்துக்கும் ஐரிஷ்குடியரசுக்கும் இப்போது சிலகாலமாகப் பிணக்கு ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. பிரிட்டிஷ் "பிரிவிக் கவுன்ஸில்" என்னும் உயர்தர நீதிமன்றத்திற்கு சுவாதீன ஐயர்லாந்து மக்கள் மறுச்செய்து கொள்வதை மிஸ்டர் டிவேலறா தமது பாராளுமன்றத்தில் சட்டபூர்வமாக நீக்கிவிட்டார் இப்படிச்செய்தமை ஆங்கிலோ—ஐரிஷ் உடன்படிக்கைக்கு முற்றிலும் விரோதமானதென்று பிரிட்டிஷ் மந்திரி மிஸ்டர் ஜே. எச். தோமஸ் சொல்லிக்கொண்டு வந்தார். ஆனால் இப்போது மிஸ்டர் தோமஸின் பிடிவாதம் ஆதாரமற்றது என்று தெரிகிறது. இப்பிரச்சினை பிரிட்டிஷ் உயர்தரநீதிமன்றத்திற்கு வந்தது. அதன் "சான்சல"ரான சாங்கிப்பிரபு அளித்துள்ள தீர்ப்பானது டிவேலறாவின் செயல் நியாயமானதே என்பதை உறுதிப்படுத்தி விட்டிருக்கிறது. "வெஸ்ற்மினிஸ்டர்" சட்டப்படி, ஐயர்லாந்து நினைத்த நேரம் இங்கிலாந்தின் பந்தங்களினின்றும் விடுதலை பெறலாம் என்றும் சாங்கிப்பிரபு புகன்றிருக்கிறார். இனி, மிஸ்டர் தோமஸ் என்செய்வர்?

* * *

தொழிலாளர் வேலை நேரத்தை வாரம் நாற்பது மணியாகக் குறைக்கும் விஷயம் சர்வதேசத் தொழிலாளர் மகா நாட்டில் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, முதலாளிகள் பிரதிநிதியான லால்ஜீ 40 மணிவேலை நேர ஏற்பாட்டை எதிர்த்தார். குறைந்தவேலை நேரம் அவர்களுக்கு நன்மையைச் செய்யாதென்றும் பம்பாயிற் சுமார் 40 விதத நெசவு மில்லுகள் மூடப்பட்டு விட்டனவென்றும், குறைந்தவேலை நேர ஏற்பட்டால் இவற்றை மறுபடி ஆரம்பிக்க முடியாதென்றும் அவர் சொன்னார். இந்தியத் தொழிலாளர் பிரதிநிதியான திரு வி. எம். ராமசாமி முதலியார் பேசுகையில் குறிப்பிட்டதாவது. இப்பொழுதுள்ள 54 மணி வேலை நேரத்தைக் குறைப்பதை திரு லால்ஜீ விரும்பவில்லையா என்று தெரியவில்லை. நிர்வாக ஊழல்காரணமாய் பம்பாய் மில்கள் மூடப்பட்டன. மகாநாட்டுத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வருவதை திரு லால்ஜீ தடைசெய்ய மாட்டாரென்று நம்புகிறேன். இத்தொழிலுக்கு அரசினர் போதிய வசதிகளைச் செய்யவில்லையென்பதைத் தொழிலாளரும் முதலாளிகளும் ஒருங்கே உணர்வார்கள்."

### காவடியெடுத்தவர் கதி.

காரைவாசியும் சிவபக்தருமாகிய கந்தர் சிதம்பரப்பிள்ளை என்பவர் தாம் மேற்கொண்ட விரதத்தைப் பூர்த்தியாக்க, ஐந்து நாட்களாக உபவாசமிருந்து தமது திருவிழாத் தினத்தன்று திங்கட்கிழமை (10-6-35) காலை 9 மணியளவில் முருகமூர்த்திகோயிலிலிருந்து 1008 வேலாயுதர், செடில், முள்ளுமிதியடி முதலியவற்றுடன் தச்சன் தோப்புப் பிள்ளையார் கோயிலுக்குக் காவடியெடுத்துச்சென்று வீதிவலம்வரும்போது ஆயாசத்துடன் நிலத்தில் வீழ்ந்து மரணம் எய்தினார். அவர்பிரேதம்வீட்டிற்குக்கொண்டு போகப்பட்டு அவ்விடம் பிரேத விசாரணை நடைபெற்றது. டாக்டர் பரிசோதனைசெய்து நின் வேல்முள் முதலிய நம்மைத் தாக்கியதே மரணத்தின் காரணமென்றார்.- நமது நிருபர்

# மகாத்மா மீண்டும் தலைவராவாரா

## சட்டமறுப்பியக்கம் தோல்வியுற்றதேன்? சாத்விக எதிர்ப்பும் பிரிட்டிஷாரும்

## இன்னோர் கிளர்ச்சி ஏற்படுமா? ஸ்ரீஜுத் சுபாஷ் போஸின் கட்டுரை!

ஸ்ரீ ஜுத் சுபாஷ் சந்திரபோஸ் ஒரு ஸ்விஸ் பத்திரிகையில் பின்வரும் கட்டுரையை எழுதியிருக்கிறார்.

இந்திய அரசியல் சம்பவங்களைப் பற்றிய செய்திகளை வெளியிட ஐரோப்பியப் பத்திரிகைகளுக்கு விஷயங்கள் நன்கு தெரியமாட்டா. மகாத்மா காந்தி தோற்று சோர்வுற்றுப் போய்விட்டதாக இங்கே அபிப்பிராயம் நிலவுகிறது. 1930-ம் வருஷம் பிரிட்டிஷ் அரசினரை யெதிர்த்து அவர் ஆரம்பித்த போரில் காந்திஜீ தோற்றுவிட்டது உண்மையே. இரு விஷயங்களில் அவர் நம்பிக்கை வைத்தார். சாத்விக எதிர்ப்பின் மூலம் நாட்டு நிர்வாகத்தை நடைபெற வொட்டாமல் தடுத்துவிடலாமென்றும், போராட்டத்தின் உயரிய தத்துவம் பிரிட்டிஷாரின் உள்ளத்தில் புகுந்து சமாதான ஏற்பாடு தோன்றுமென்றும் அவர் கருதினர்; ஏமாற்றமடைந்தார்.

சாத்விக எதிர்ப்புப் போராட்டத்தில் நாட்டின் எல்லாப்பக்கங்களிலுமுள்ள ஜனங்கள் கலந்துகொண்டபோதிலும், பிரிட்டிஷ் இந்திய நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்ய இயலவில்லை. பிரிட்டிஷ் அரசினர் நிர்வாகத்தை நடத்திவருகிறார்கள். பிரிட்டிஷார் மனத்தில் போராட்டத்தின் தத்துவம் புகவில்லை. 1934-ம் வருஷம் மகாத்மாவே இயக்கத்தை நிறுத்திவைத்துவிட்டார்.

90 ருத்தல் எடையுள்ள இவருடைய சக்தியின் ரகசியம் தானென்னவென்ற கேள்வி அடுத்தபடியாக எழுகிறது. இவர் முற்றிலும் சுயநலப்பற்றற்றவர். ஜனங்களின் நன்மையை முதன்மையாகக் கருதுகின்றவர். 1895-ம் வருஷம் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட காங்கிரஸ் அவரை ஆதரிக்கிறது. இவரது பரிசுத்தமே இவருக்கு உயர்வைக் கொடுக்கிறது. ஆனால், ஒரு பலத்த அரசியற் கட்சி அவரைப் பின்பற்றுத வரையில் பிரிட்டிஷ் அரசினர் அவரைக் கண்டு பயங் கொள்ளமாட்டார்.

சாத்விகப்போர் நின்றதும் காங்கிரஸ் நடைமுறை மாறியது. சட்ட வரம்புக்குட்பட்ட முறையில் போராட ஒரு கட்சியார் சட்டசபையில் புகுந்தார்கள். மகாத்மாவின் தலைமையில் ஒரு கோஷ்டியார் ஜனங்களின் பொருளாதாரக் கஷ்டத்தைப் போக்க முயலுகின்றனர். தற்காலிகமாக அவர் காங்கிரஸிலிருந்து விலகிய போதிலும் அவருடைய செல்வாக்கு முன்போலவே இருக்கிறது. அவரால் தீர்மானிக்கப்பட்டவர்களே இப்பொழுது தலைவர்களாயிருக்கின்றனர். காங்கிரஸின் திட்டமும் அவர் சம்மதத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே இன்னும் காங்கிரஸ் அவரது ஆதரவைப் பெற்றிருக்கிறது.

பிரிட்டிஷ் அரசினர் தயாரித்திருக்கும் இந்திய அரசியற் திட்டம் இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. பால்டுவினுக்கும் சேர்ச்சிலுக்கும் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் இந்தியருக்கு முக்கியமல்ல. பால்டுவின் இந்தியரைச் சரணடையச் செய்வதாக மிஸ்டர் சேர்ச்சில் கருதலாம். அதற்காக இந்திய மிதவாதிகள்கூட பால்டுவின் கொடுப்பதை ஏற்க மறுக்கக்கூடாதென்று சொல்லவியலாது.

புது அரசியற்திட்டப்படி மாகாணங்களில் சட்டசபைகளுக்குப் பொறுப்புள்ள மந்திரிகள் இருப்பர். ஆனால் பிரிட்டிஷ் அரசினருக்கு மாத்திரம் ஜவாப்தாரியான தேசாதிபதி எந்த இலாகா நிர்வாகத்தையும் தாமே ஏற்றுக்கொண்டு மந்திரிகளின் போக்கைத் தடைசெய்யலாம். உயர்தர உத்தியோகத்தர்கள் ராஜப் பிரதிநிதிக்கும் பிரிட்டிஷ் மந்திரிசபைக்குமே பொறுப்பாளிகளாயிருப்பார்கள். மத்திய அரசினரில் தேசாதிபதியைவிடப் பரந்த அதிகாரங்கள் ராஜப்பிரதிநிதிக்கு இருக்கும்; வரவு செலவுத் திட்டத்தில் 100க்கு 80விகித விஷயங்களில் தலையிட மத்தியசபைக்கு உரிமையிராது. பொருளாதார வெளிநாட்டு விஷயங்கள் சட்டசபைக் குட்பட்டவையல்ல. இங்கிலாந்தின் வர்த்தகத்திற்குப்பாதகத்தை உண்டு பண்ணத்தக்க சட்டங்களை இங்கே நிறைவேற்ற முடியாது.

மத்திய சட்டசபையில் ஹிந்துக்களின் பிரதிநிதித்துவமும் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜனத்தொகையில் முக்கால் வாசிப்பேரான ஹிந்துக்கள் பெரும்பாலும் காங்கிரஸ் கோரிக்கையை யாதரிக்கிறார்கள். மாகாண சட்டசபைகளில் சிறுபான்மை வகுப்பாருக்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. மத்தியசட்டசபைகளில் சமஸ்தானங்களுக்கு அபரிமிதமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிநிதிகள் ஆங்கிலேயருக்குச் சாதகமான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்பது அரசினர் அபிப்பிராயம். உண்மையில் அதிகாரத்தை இந்தியருக்குக் கொடுத்தால் தேசியவாதிகளில் பலர் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொள்ளுவார்கள். அக்கட்சியே சில காலமஸ்தம்பிதமாகிவிடும்; இப்பொழுதுள்ள தேசியக்கட்சி எதிர்க்கட்சியாக யிருந்தே வேலைசெய்யும். தங்கள் சர்வாதிகாரம் போய்விடுமோ வென்ற பயத்தில் மன்னர்கள் சமஷ்டியில் சேரத் தயங்குகின்றனர். அவர்கள் அரசினர் இஷ்டப்படி நடப்பதாகவிருந்தால் தேசிய ஜனநாயக இயக்கம் சமஸ்தானங்களிலும்பரவிவிடுவது உறுதி; சமஸ்தானங்களை இதுவரை காங்கிரஸ் புறக்கணித்திருந்தது. தொழிலாளர் இயக்கம் காங்கிரஸ் அபேதவாதிகள் இயக்கம் இவ்விரண்டும் இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. ஜனங்களின் வறுமையும் சுதந்திர ஆவலும் மறுபடியும் போராட்டத்திற்குக் காரணமாயமையும். புதிய அரசியல் மற்றொரு கிளர்ச்சிக்கு இடம் கொடுக்கும் இந்தியா எதிர்பார்க்குமாறு மகாத்மா திறமையுடனிருந்தால், அவர் தலைமையிலேயே போராட்டம் நடைபெறும்.

## தவறவணக் குத்தகை விற்பனை.

—(*)—

### லட்சக்கணக்கில் வருமானம்.

—:*:—

### இவ்வாண்டு விற்பனை விபரம்.

இவ்வாண்டுக் கள்ளுத்தவறணைக் குத்தகை பின்வருமாறு:—

| இடம் | ரூபா | சதம் |
|---|---|---|
| சுருவில் | 8000 | |
| சிவியாதெரு மேற்கு | 13150 | 50 |
| பாஷையூர் | 12575 | |
| கொய்யாத்தோட்டம், | | |
| கரையூர் | 25678 | 90 |
| தல்லாலை | 14028 | 18 |
| தாராக்குளம் | 16550 | |
| ஆரியகுளம் | 22675 | 96 |
| அச்சுவேலி | 13150 | |
| புத்தூர் மேற்கு | 16500 | |
| அல்வாய்மேற்கு | 24805 | |
| புலோலிமேற்கு, | | |
| பருத்தித்துறை | 47612 | 95 |
| குடத்தனை | 2750 | 90 |
| காரைகோவில் | 2176 | |
| சாவகச்சேரி | 17515 | |
| அல்வாரை | 9235 | |
| மிருசுவில் | 6520 | |
| எழுதுமட்டுவாள் | | |
| மேற்கு | 2812 | |
| எழுதுமட்டுவாள், | | |
| வடக்கு, தெற்கு | 4050 | |
| மாசார் | 2215 | |
| திருநெல்வேலிகிழக்கு | 23636 | 73 |
| கோப்பாய் வடக்கும் | | |
| தெற்கும் | 15175 | 75 |
| சங்கானை | 50475 | |
| மாதகல் பெரியவிளான் | 21500 | |
| வண்வடமேற்கு | 14000 | |
| முகமாலை | 2250 | |
| நவாலி | 15803 | |
| கைதடி நுணுவில் | 12051 | |
| நாவெட்டி மேற்கு | 16165 | |

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்)

ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையவர்கள் இப்பத்திராசிரியர் மீது சுமத்தியுள்ள பிறிதொரு அபவாதம், நாவலரையா அவர்கள் அறுபத்திரண்டுவருடங்களுக்குமுன், திருக்கேதீச்சரம் என்னும் ஆலயமிருந்த நிலத்தை வாங்கி அதில் ஒரு சிவாலயங்கட்ட வேண்டுமென்று "யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும் பத்திரத்தில் எழுதியிருப்ப, அதனை ஸ்ரீ மு. பசுபதிச் செட்டியார் தொடங்கியதென்று அவர் தலையில் இந்துசாதனப் பத்திராசிரியர் ஒரு முறை முடித்திருக்கிறார் என்பதாம். பிள்ளையவர்கள் இவ்விஷயமாகக் குறிப்பிடுவது 1934-ம் ஆண்டு வைகாசி மாதம் 17 உ வெளிவந்த இந்துசாதனத்தில் "சைவபரிபாலன சபை" என்னுந் தலையங்கத்தில் எழுதப்பட்டவைகளைப் பற்றிப்போலும். இந்த விஷயம் இப்பொழுதுள்ள பத்திராசிரியர் மேற்படி செட்டியார் தலையில் ஒருமுறை முடித்ததன்று; குறித்த கைலாசபிள்ளையவர்களே இப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்து, அதாவது 1894-ம் ஆண்டு சித்திரை மீ 18-ந் உ வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்தில் ஸ்ரீ பசுபதிச்செட்டியார் அவர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:—

"இங்கே திருப்பணிவேலை செய்வதற்காக இதுகாறும் நிலப்பரிசோதனை செய்து வருகிறார்கள். இன்னும் சில காலத்துள் வேலை ஆரம்பிக்க வேண்டுமென்னும் அவாவினால் ஸ்ரீ பழனியப்ப செட்டியார் முதலிய செட்டிமாரும் ஸ்ரீ க. ச. பொன்னம்பலபிள்ளை, ஸ்ரீசித.மு.பசுபதிச்செட்டியார் முதலியவர்களும் சிற்பர்களும் இரண்டு தினத்தில் போகத் தீர்மானித்திருக்கிறார்கள்............"

பிள்ளையவர் இற்றைக்கு 41 வருடங்கட்கு முன் தாமே எழுதிவிட்டு இப்பொழுது உள்ள பத்திராசிரியர்மீது பழிசுமத்தத் தலைப்பட்டது மறதியாலா? இல்லையேல் வேறு காரணத்தினாலா? இதுவே கைலாசபிள்ளைப் பத்திராசிரியர் முதல்முறை செட்டியார் தலையில் முடித்ததாகும்.

ஃ ஃ ஃ

மேலும், 1906-ம் ஆண்டு மார்ச்சு மீ 14-ம் தேதி வெளிவந்துள்ள இந்துசாதனப் பிரசுரத்தில், ஸ்ரீ சி. த. மு. பசுபதிச் செட்டியார் அவர்களின் தேகவியோக விஷயமாக, அக்காலத்திருந்த பத்திராசிரியர் எழுத நேர்ந்தபோது, இத் திருக்கேதீச்சரத் திருப்பணி சம்பந்தமாக, மேற்படி செட்டியார் அவர்களைக் குறித்துப் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்.

"ம. ா. ா. ஸ்ரீ பசுபதிச் செட்டியாரவர்கள் திருக்கேதீச்சர விஷயத்திலும் அதிக சிரத்தை யெடுத்தவர். இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்குரிய நிலம் அரசாட்சியாரிடமிருந்து வாங்கப்பட்டபோது இவருக்கு இருந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. இத் திருக்கேதீச்சரத்தில் முன் ஆலயம் கட்டப்பட்டிருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு இவர் எடுத்த பிரயாசை மிகப் பெரிது......"

இது அக்காலத்திருந்த பத்திராசிரியர் மேற்படி செட்டியார் தலையில் இரண்டாம் முறை முடித்ததாகும்.

ஃ ஃ ஃ

இனி, திருக்கேதீச்சராலயத் தரும பரிபாலகர்களாகிய நகரத்தார்களாலே 1919 ம் ஆண்டு வைகாசி மீ அச்சிடுவித்து வெளிவந்துள்ள திருக்கேதீச்சர தலபுராணம் 20-ம் பக்கம், உத்தரபீடிகையில்:

"...............ஜயவருஷ ஆனிமீ க.உ சித. மு. பசுபதிச் செட்டியார் மூலமாகப் பெருந்திரளான பணஞ் செலவு செய்யப்பட்டு பழைய கட்டிடங்களும் கிணறுகளும் கண்டுபிடிக்கலாயின...............' என எழுதப்பட்டிருக்கின்றது இது மூன்றும் முறை மேற்படி செட்டியார் தலையில் குறித்த ஆலயத் தருமபரிபாலகர்கள் முடித்ததாகும். இவ்வாறு பிள்ளையவர்கள் தாமும் அக்காலத்துப் பத்திராசிரியரும், ஆலய தரும பரிபாலகர்களும் முறைக்குமுறை முடித்துவிட்டு, ஐயோ! பாவம்!! இப்பொழுதிருக்கும் பத்திராசிரியர்மேற் பழி சுமத்துவது முறையாகுமா?

ஃ ஃ ஃ

மேலும் திருப்பணி விஷயமாக அக்காலத்திலே செட்டியாரவர்களுடன் சென்ற "மேஸன்" சின்னவியென்பவரை இப் பத்திராசிரியர் நேரிற் கண்டு கேட்டபோது, செட்டியாரவர்கள் தான் அத் திருப்பணி விஷயத்திற் பிரதான சிரத்தையோடும், இடையறா ஊக்கத்தோடும் உழைத்தவரென்று சொன்னார். இந்த உண்மையை எவரும் குறித்த மேசனிடம் நேரிற்கேட்டு அறிந்து கொள்ளலாகும்.

ஃ ஃ ஃ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் கையெழுத தென்னத் தக்க ஆதாரத்தோடு இந்துசாதனப் பத்திராசிரியர் நம்பி வெளியிட்ட விஷயத்தைத் தமது "ஆராய்ச்சிமுறை" என்னுங் கடிதத்திற் கண்டித்து இப் பத்திரிகையிலும் ஈழகேசரிப் பத்திரிகையிலும் வெளியிட்டு இப்பத்திராசிரியர் கூற்றைப் பொய்ப்படுத்த முயன்ற ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையவர்கள், சைவப்பிரசாரகராகவிருந்த மாதகல் பிரமஸ்ரீ சு ஏரம்பையரவர்களை இருத்தியெடுத்த பிரதிமைப்படத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய பிரதிமைப் படமென்று பாவித்துத் தமது வித்தியாசாலைப் புதுக்கட்டடப் பிரவேச காலத்தில், திறந்து வைத்துப் பூசித்ததோடு அமையாது இன்னும் பூசித்து வருகின்றாரமே? இது மெய்தானா?

## இன்னோர் பிணக்கு.

### சர்வகலாசாலைப் பேராசிரியர் நியமனம்.

### மந்திரசபையினர்க்கும் அதிகாரிகளுக்கும் வாதம்.

இலங்கைச் சர்வகலாசாலைக்கு ஓர் சரித்திரப் பேராசிரியரை நியமிப்பது சம்பந்தமாகக் கலாசாலை அதிகாரிகளுக்கும் வித்தியாபகுதி மந்திர நிர்வாகசபையினர்க்குமிடையேபிணக்குஏற்பட்டிருக்கிறது என அறிகிறோம். கீழைத்தேச சரித்திரப்போராசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற ஏற்பாடாயிருந்தது. தற்போது சரித்திரப் பேராசிரியராயுள்ளவரை நியமிக்கலாமெனச் சர்வகலாசாலை யதிகாரிகள் சிபாரிசு செய்தனர். அதன்படி சரித்திரத்தில் 1-ம் வகுப்பில் விசேஷ சித்தியெய்தித் தற்போது இங்கிலாந்தில் நிற்கும் ஒருவரை நியமிக்க மந்திரசபை சிபாரிசு செய்தது தற்போது இலங்கையில் இருப்பவரும் 2-ம் வகுப்பில் விசேஷசித்தியை எய்தியவருமான ஒருவரை நியமிக்கவேண்டுமெனச் சர்வகலாசாலையதிகாரிகள் சிபாரிசு செய்திருக்கின்றனர்.

இது விஷயமான கடைசித் தீர்மானம் தேசாதிபதியிடமே இருக்கிறது.

### ஆஸ்திரேலியாவும் இந்தியப் பூகம்பமும்.

குவெற்றாப் பூகம்ப நிவாரணத்தின் பொருட்டு ஆஸ்திரேலிய அரசினர் 10000 பவுண்கள் உதவுவர் என்று ஓர் செய்தி கூறுகிறது.


### சில்லாலை முத்துவைத்தியசாலை வைத்திய விளம்பரம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

நமது வைத்தியத்தைப்பற்றி அறிந்தோர் பலரும் நம் சுதேசபதியாகிய சில்லாலை ஆயுர்வேத வைத்தியர் என்பதைச் சிந்திக்குமிடத்து மிக்க ஆனந்த—சிவ காருண்ணிய பரோபகார உத்தமர் என்பதைப் பேறுதி ஏற்றி மகிழுவார்கள். ஏனெனில் இல்லது பல தலைமுறை வைத்தியம். இலங்கா மங்கையின் முதன்மை பெற்ற வைத்தியம். அரசினராலும் கல்விமான்களாலும் மற்றெல்லாராலும் ஏற்றிப் போற்றப்பட்ட வைத்தியம். இதனை நன்கறிந்த தெல்லிப்பதி வாசரும் நம் வைத்திய உதவி தம்பதியில் நிலவச் செய்யுமாறு விநயமாய்க் கேட்டுக்கொண்டமை பற்றி அதன் இச்சாலையாக ஒன்றை அங்கு ஸ்தாபனம் பண்ணி, திஙகள் அங்கு சாயந்தரம் 3 மணி தொடங்கி 6 மணி வரையும் நமது வைத்தியத்தை நடத்தத் தீர்மானித்திருக்கின்றோம். நோயாளர் குறிக்கப்பட்ட நேரத்தில் வந்து தரிசனை செய்வதால் மிக்க நன்மை உண்டென்பதை ஈண்டு சொல்லத் தேவையில்லை.

ஜீவனுக்கு ஆதாரம் நல்லிரத்தமே. நல்லிரத்தமின்மையாலே உண்டாகும் எல்லா நோய்களையும் ஒருங்கே நீக்கும் பெற்றி வாய்த்த அவுடதங்களே இங்கு இருப்பதால் எவர்க்கும் இவ்வைத்தியசாலை ஜீவகாருண்ணியசாலை யெனவும் பகருதல சாலச் சிறப்புடையதேயாகும்.

தமிழ் வைத்தியத் தாயை ஆதரிப்பது உங்கள் கடனே!

அ. செபஸ்தியாம்பிள்ளை,
அரசினரின் அங்கீகாரம் பெற்ற
(முத்து)வைத்தியர்,
தலைமை வைத்தியசாலை,
சுண்டிக்குளி கதோலிக்க அச்சியந்திரசாலைக்கு
முன்பாக, பெரியதெரு,
யாழ்ப்பாணம்.
கிளைவைத்தியசாலை, தெல்லிப்பளை
அமெரிக்கன் மிஷன் பாடசாலை
முன்பக்கம்,

(Mis 80. 13-6 to 24-6-35)

# பிரபலஸ்தர்க்குக் கடிதம்.

("வாஸவன்" எழுதுவது.)

வடமாகாணப் போலிஸ்தலைவர்
### மிஸ்டர் V. T. டிக்மன்துரை அவர்களுக்கு:—

*அன்புமிக்க துரையவர்களே!*

சலாம்! தாங்கள் மேன்மாகாணத்தில் கடமை பார்த்த காலத்தில் குற்றங்களைத் தடுப்பதிலும், ஒழிப்பதிலும் எடுத்திருக்க சிரத்தையையும் தங்கள் திறமையையும் பத்திரிகைகள் மூலமாக அறிந்தயான், தங்கள் மேற்பார்வையின்கீழ், தங்கள் பரிபாலனத்தில், இங்கே குற்றங்கள் முன்னிருந்த போதும் இல்லாதவாறு அதிகரித்து விட்டனவே என்பதையிட்டு உண்மையில் வருத்தமுறுகின்றேன். இந்த யாழ்ப்பாணத்தில் கொலை வாரமொன்றுவதாக நடக்கிறது. களவுகளைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. பிரதான அரசாங்க நிலையங்களாகிய புகையிரதஸ்தானம் போகு என்பவற்றிற்குள்ளும் கள்வர் துணிகரமாகப் புகுந்து தம் கிருத்திரமத்தை ஆற்றிவிட்டனர். தபாற்கந்தோர், கச்சேரி என்பனவே பாக்கியாக இருக்கின்றன; ஏன்? பொலிஸ்தானத்திற்குள்ளேயே அவர்கள் நுழைந்தாலும், தற்போதைய நிலையில் ஆச்சரியமுறேன். இக்குற்றங்களின் விருத்திக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் பொலிசாரின் பராமுகமும் ஒன்றெனறு பலர் பேசிக் கொள்வதைத் தாங்களும் ஒத்துக் கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன். இப்படிக் கூறுவதனால் யான் தங்கள் திறமையை இழிவுபடுத்துகிறேன் என்று விபரீதவெண்ணங் கொள்ளவேண்டாமெனத் துரையவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் நம் பொலிசார் மூலை முடுக்குகளிற் பதுங்கிப் பிரமாணத்துக்கு மிஞ்சி ஆட்களை ஏற்றிச் செல்லும் பஸ் வண்டிகளைப் பிடித்தல், அறியாமை காரணத்தினால் நடுத்தெருவில் வண்டிகளை நிற்க விடுபவர்மீது குற்றஞ் சாட்டுதல் என்னும் இன்னோரன்னவற்றிற் செலுத்தும் சிரத்தையில் 100 ல் 10 பங்கேனும், கொலை களவுக் குற்றவாளிகளையும், சந்தேகப் பேர்வழிகளையும் பிடிப்பதிலும், இரவிற் 'பத்ரோல்' காவல் புரிவதிலும் எடுத்தால் பெருங்குற்றங்கள் யாவும் ஒருவாறு குறையும் என்பதைத் தாங்கள் அறியுமாறு மிகத் தாழ்மையுடன் சமர்ப்பிக்க விரும்பும் "வாஸவன்"

---

பிரபல நியாயவாதியும், சட்டநிரூபணசபையின் அங்கத்தவராயிருந்தவரும், ஜனத்தலைவருமான

ஸ்ரீமான்.
### வை. துரைசுவாமி B. A. அவர்கட்கு:—

*அன்பார்ந்த ஐயா,*

தாங்கள் அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிவிட்டீர்களோ, அதனால் யாழ்ப்பாணமாது தனது முன்னேற்றத்திற் கவலை கொண்ட ஓர் புதல்வனின் சேவையை இழந்து விட்டாளோ, என்று இதுகாறும் கவலையுடன் இருந்தயான், தாங்கள் அடுத்த அரசாங்க சபைத்தேர்தலில் ஊர்காவற்றுறைத்தொகுதிப் பிரதிநிதியாக மூற்படிருக்கிறீர்கள் என்பதை இப்பத்திரிகைவாயிலாக அறிந்து மிக மகிழ்ச்சியடைகின்றேன். டொனோமூர் அரசியற்றிட்டம் பிற்போக்கானது, அது எமது அடிமைத்திறத்தை இன்னும் அதிகரிப்பதாய் இருக்கிறது என்பது உண்மையே. ஆனால் என் செயலாம்! தங்களைப்போன்றதேசாபிமானிகள் இந்த அரசியற் றிட்டத்தைப் பகிஷ்கரித்தாலும், பிரித்தாளும் தந்திரமுடைய அந்நிய அரசினருடன் ஒத்துழைத்து அன்னவர் அளிக்கும் பட்டங்களையும் பதவிகளையும் ஏற்பான் வேண்டி இராசவிசுவாசப் பல்லவிபாட அநேக மூத்தவர்கள் காத்து நிற்கின்றார்கள். பூனையில்லா வீட்டில் எலி சஞ்சரிக்கொள்வதுபோல இப்பதவி வேட்டுவரால் அரசாங்கசபையில் எமக்குக் கிடைத்த சிலாக்கியங்களும் மரியாதையும் கௌரவமும் மானமும் போதும் போதும். இன்னும், அரசாங்கசபையில் தமிழ்மக்களாகியநாம் தேசாபிமானத்தில் மற்றெவர்க்கும் பின்னடையேம். ஆனால் இலங்கையிலுள்ள எந்தத் தனிச் சாதியத்தாரும் மற்றேச்சாதிகாரம் செலுத்த வொண்ணாது. பெரும்பான்மையினரான சிங்களமக்களுக்கு இலங்கையில் எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உரிமை தமிழ்மக்களாகிய எமக்கும் உண்டு என்பதைச் சிங்களச் சகோதரர்க்கும், பிரிட்டிஷ் அரசினர்க்கும் சர்வ உலகினர்க்கும் காட்டவேண்டிய காலம் மிகச் சமீபத்தில் வந்து விட்டது. இச்சந்தர்ப்பத்தில் தங்களைப் போன்றோர் நாலவர் அரசாங்க சபையிலெம் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும் என்று என்போல்வார் கோருவதுமிகையாகாது.

இங்ஙனம்,<br>
தங்களன்புள்ள,<br>
"வாஸவன்"

---

தமிழபிமானியும் வடபெரும்பாக வித்தியாதரிசியுமான ஸ்ரீமான்,
### K. S. அருள்நந்தி M. Sc. அவர்கட்கு:—

*செந்தமிழ் ஆங்கிலம் வல்ல சீருடையீர்,*

செந்தமிழ், ஆங்கிலம் என்னும் இருபாஷைகளிலும் உண்மையான வல்லுநராய், சமயாபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் என்னும் மூவபிமானமும் உள்ளவராய், சங்கீதம், சித்திரம் நாடகம் என்னும் கலைகளின் வளர்ச்சியை உண்மையிற் கருதுபவராய், தற்பெருமை அற்றவராய், புகழ் கீர்த்தி என்பவற்றை விரும்பாது கடமையைச் செய்தால் மாத்திரம் போதும் என்ற கொள்கை உடையவராய், தற்பெருமை பிடித்த குட்டி வித்தியாதரிசிகளினால் அடிமைகள் எனமதித்து நசிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்க்கு உற்றதுணையானவராய் உள்ள ஒருவித்தியாதரிசி இங்கு அனுப்பப்பட்டவரானால், அது தாங்களே என்பதை மனப் பூர்வமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்கள் தலைமை வித்தியாதரிசியாய் இந்த கடமையேற்ற காலந் தொடக்கம் இற்றைவரை நடக்கும் கலையாக்க முயற்சிகள்பல தங்களின் திறமையைத் துலாம்பரமாகக் காட்டா நிற்கும். எனினும் தங்களுக்கு அடியேன் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பம் ஒன்றுண்டு. தங்கள்கீழ்க் கடமைபார்க்கும் சில குட்டி வித்தியாதரிசிகள் தாம் பொதுஜன ஊழியரென்பதை மறந்து, கல்வியை வளர்க்கும் பெரும் பொறுப்பைக் கொண்டுள்ள ஆசிரியர்க்கு உதவிசெய்வதற்காகவே தாம் நியமிக்கப்பட்டவர்கள் என்ற உண்மையைத் துறந்து ஏதோ வானத்தில் இருந்து குதித்த பிறவிகளெனத் தம்மை மதித்து தமிழ்ஆசிரியர்மீது தமது அதிகாரத்தைக் காட்டப் பன்முறை முயன்று சில சந்தர்ப்பங்களில் வெற்றியும் பெறுகின்றனரென அறிகிறேன். இப்படிப்பட்ட குட்டிவித்தியாதரிசிகள் யாரேனும் தங்கள் கீழ் இருப்பாரானால், அவர்க்கு உண்மையைத் தெருட்டிப் பாடம்படிப்பிக்கவேண்டியது தங்கள் கடமை என்பதை மட்டும் இறுதியிற் கூறி இச்சிறு கடிதத்தை முடிக்கின்றேன்.

இங்ஙனம்,<br>
தங்களன்பன்,<br>
"வாஸவன்"

---

யாழ்ப்பாணக்கல்லூரி உதவிப் பிரதமாசிரியர்
### மிஸ்டர் J. V. செல்லையா M. A., J. P. அவர்களுக்கு:—

*புதிய சமாதான நீதிபதியவர்களே,*

தங்களைப் பாராட்டுவதற்காகச் சென்ற வாரம் கொழும்பு ஸகீராக் கல்லூரியில் ஓர் உபசாரக் கூட்டம் நிகழ்ந்ததெனப் பத்திரிகை வாயிலாக அறிகின்றேன். தேநீர்க் கச்சேரி முடிந்தபின், தங்களுக்குப் பிரிட்டிஷ் அரசினர், மன்னரது வெள்ளி விழாவின் ஞாபகார்த்தமாக சமாதான நீதிபதிப்பட்டம் வழங்கியதையிட்டுப் பெருமிதமடைந்து சில மொழிகள் பகர்ந்தீர்: தங்களுக்கு அப்பட்டத்தை அரசினர் வழங்கியதால் ஆசிரியர்கள் யாவருக்குமே ஓர் பெருங் கௌரவம் ஏற்பட்டதாகத் தாங்கள் கூறினீர்கள். தங்கள் நண்பர்கள் அளித்த தேநீர் சிற்றுண்டி என்பவற்றை உட்கொண்டதால் இப்படி மெய்மறந்து கூறினீர்களோஎன்று நான் சற்றுச் சந்தேகிக்கப்படவேண்டி இருக்கிறது. தங்களுக்குச் சமாதானநீதிபதிப்பட்டத்தை அரசினர் அளித்தமையால் உபாத்தியாயர் எவ்வாறு கௌரவம் அடைந்து விட்டனர்! அவர்களது பொருளாதார நிலைமை உயர்ந்துவிட்டதா? என்று தங்களையே கேட்கிறேன். நாளை மனுஷராய் வரும் நம் கான்முளைகளுக்குத் தேச பக்தியையும், சுதந்திர தாகத்தையும் ஊட்டவேண்டிய பொறுப்பு வாய்ந்த ஆசிரியரான தாங்களே கேவலம் அந்நிய அரசினரளித்த ஓர் அற்ப பட்டத்தைக் கண்டு இத்தகைய பெருமிதமடைந்தால் யான் கூறக்கூடியது என்னே? ஆண்டவனையற்றவர்களாய், அடிமைகளாய், கோழைகளாய் வாழும் இலங்கை மக்களுக்குச் சுதந்திர தாகமூட்டிச் சுதந்திரப்போரின் முன்னணியில் நின்று இலங்கை மக்கள் மனமுவக்தளிக்கும் "தேசப்பிரியர்", "தேசபந்து", "லோகமான்யர்" எனும் பட்டங்களைப் பெருமையுடன் நம்மவர்கள் தாங்கிநிற்பதெக்காளோ?

இங்ஙனம்,<br>
தங்கள் நிலையறிந்திரங்கும்,<br>
"வாஸவன்"

---


## ஏழு தலைமுறையாய் அனுபவமுள்ள மருந்துகள்.

சமஸ்தான வைத்திய நிபுணரான சி. எம். சாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ்பெற்றவை. உண்மையான குணமுள்ளவை, உள்ளூர், வெளியூர் வாசிகளால் நன்கு மதிக்கப் பெற்றவை.

இந்தியாவில் பெரிய புகழ் பெற்றது.




பெரிய நற்சாட்சி கேட்லாக் இனும்.

நீங்கள், என்றும் மீபாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் மகாவீரிய தங்கடஸ்பம் சாப்பிடுங்கள். கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல் குன்மம், குஷ்டம் முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லறவாழ்வில இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து நளர்ந்தநரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும். 24நாள் பஸ்பம் விலை ரூ. 10.

நாகபஸ்பம். (மூலவியாதிக்கு) மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். ஆப்ரேஷன் செய்யவேண்டிய அவசியமில்லை. முளை தானே கரையும். சீழ் மூலம், இரத்தமூலம், குதநல், மூல முளை, மலபந்தம், முதலியவை குணமாகும். புட்டி 1க்கு விலை ரூபா 4—0—0.

தாளகபஸ்பம். (இருமலுக்கு) காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி. எட்டுவித காசமும் தீரும். 24வேளை புட்டி 1க்கு விலை ரூபா 4.

அப்ரேக் செந்தூரம். (நீரழிவுக்கு) நாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தித் தேக வெளுப்பை மாற்றி இரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் நீங்கும். புட்டி 1க்கு விலை ரூபா 15. தபால் சார்ஜ் வேறு.

குறிப்பு:—ஏராளமான நற்சாட்சிகவள விபரமான கியாட்லாக்கில்பார்க்கவும், பினங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், தென் ஆபிரிக்கா முதலிய பிறதேசவாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. சிஷ்டமுள்ள பிறதேசவாசிகள் ரூபா 5—0—0 அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

(Q. 49. 9-5 to 8-8-35.) மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.


---


## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரைவுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒரு பங்கு 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆகலால், முதலை வளர்த்து வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபெக்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.


வ. சோமசுந்தரம்,<br>
காரியாதிகாரி.

(Y. 137. 1-11-34 to 31-10-35.) வி.


---


## வாலிபம் வேண்டுமா?

அப்படியெனில்<br>
இம்மருந்தைக்<br>
கொள்மின்!



வயோதிகத்திலும் பார்க்கக் கடனே உமது முகத்தைத் திரைக்கப்பண்ணிக் கிழவனாக்குகின்றது. கடினவேலையிலும் பார்க்க, பணவிஷயமான துன்பங்களே தீவிரத்தில் உமது வாலிபத்தைப் போக்குகின்றது. தேகசுகமும் மனச்சாந்தியும் நீர் பெறவேண்டுமானால், சேமநிதியிற் பணத்தைப் போடுதலால் எமக்குப் பாதுகாப்புண்டு என்ற உணர்ச்சி வரவேண்டும். அதுவே உமக்குப் பெரும்துன்ப நிவாரணமாம்.

ஆவசியக சந்தர்ப்பத்திற்கும், வருவாய் குறைந்த, அல்லது நின்றகாலத்திலும் தயாராயிருப்பது நீங்கள் எண்ணுகிறபடி கஷ்டமல்ல. உங்கள் செலவோடு செலவாய் எம்மிடம் பணத்தைச் சேமியுங்கள். நாங்கள் உதவிசெய்கிறோம்.

கோய்லன்வங்கி லிமிற்றெட்,<br>
யாழ்ப்பாணம்.

Y. 71 23-5 to. 22-5-36


---


## விளம்பரம்.

நா. கந்தையா<br>
வெந்தீஸ் பேஸ்தரும்<br>
கோட் டிவிற்பனவு<br>
கொம்மிஷனரும்.<br>
கொட்டடி,<br>
யாழ்ப்பாணம்.

(M. 3-6 to 31-12-55)

# களைப்பு ஆரோக்கியத்திற்குப் பழுது.




## காலதாமதமின்றி நேரத்துடனேயே பெலமடையுங்கள்.

ஹோர்லிக்ஸ்பால் 100க்கு 33 விகிதம் உற்சாகத்தையும் பெலனையும் அதிகரிக்கப்பண்ணுகிறது.

அநேகர் தினந் தோறும் களைப்படைந்தாலும், அதைப்பற்றிச் சிந்திக்காது இருக்கிறார்கள். இது ஆபத்து. நோய்க்கிடமாகும். தற்செயலாக ஏதும் தொற்று வியாதி வந்தால், அல்லது கொஞ்சம் கூட வேலைசெய்தால் அவர்கள் ஆபத்தடைவது நிச்சயம்.

உமக்குக் கொஞ்சம் பெலம் சேமமாயிருத்தல் வேண்டும். அது சாப்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. அனேகரின் உணவில் ஜீவசக்திக்கான வஸ்துக்கள் இல்லை. அல்லது ஜீரணிக்க முடியாத வஸ்துக்கள் இருக்கின்றன.

இதில்தான் ஹோர்லிக்ஸ் பாலின் மேன்மை தங்கியிருக்கிறது. முழுவதும் ஜீவசக்திப் பொருளைக் கொண்டது. ஜீரணிப்பைப் பங்கப்படுத்தாது. ஜீவசக்தியைப் புதிது புதிதாகக் கொடுக்கிறது. நோய்கண்டு மாறி, ஜீரணசக்தி குறைவாயுள்ளவர்களுக்கு டக்ரர்மார் இப்பாலை விதிக்கின்றார்கள்.

களைப்படையும்போது ஹோர்லிக்ஸ் பாலைப் பருகுமின்! உடனே பயன் கிடைக்கும். வேலையினால் நாடோறும் வரும் களைப்பு இல்லாதிருப்பதற்காகத் தினந்தோறும் இதனைப் பருகுங்கள். ஹோர்லிக்ஸ் பாலை ஒவ்வொருநாளும் பாவித்தால் தேகசக்தி 100க்கு 33 விகிதம் அதிகரிக்கின்றது. என்பது பரீட்சைசெய்து கண்டறியப்பட்டிருக்கிறது.

### ஹோர்லிக்ஸ் பால் அருந்துவதற்கான சிறந்த நேரம்.

ஆயிரக்கணக்கான முயற்சியுடையார் ஹோர்லிக்ஸ் பாலை உபயோகித்து அதன் கைமேற்பலனைக் கண்டிருக்கின்றனர். வேலைக்குப் போகமுன் ஒரு கோப்பை ஹோர்லிக்ஸ் பால் அதிகம் சுகத்தைக் கொடுக்கும். மத்தியானத்திலும் கொஞ்சநேரம் மிச்சம்பிடித்து இதனைப் பருகினல் மிக்க நலம். இரவில் ஹோர்லிக்ஸ் பால் நரம்புகளுக்கு ஆறுதலைக் கொடுத்து நல்ல நிம்மதியற்ற நித்திரையைக் கொடுக்கும். இப்பாலாகாரம் ஆக்குவது இலகு. ஹோர்லிக்ஸ் பால் அடிக்கும் கருவியால் ஆக்கின் இன்னும் ருசியாயிருக்கும். இக்கருவி 75 சத முத்திரையனுப்பி கொழும்பு மில்லர் அன்கம்பனி லிமிட்டெட் இடம் அல்லது கடைகளிற் பெறற்பாலன.







**ஹோர்லிக்ஸ் பாலின் தன்மை.**

பசுவின் பாலுடன் மோல்ற்றட் வாளி என்பவற்றின் திறமான ஜீவசத்துப் பொருள்களைக்கொண்டது. ஹோர்லிக்ஸ் பால் முழுவதும் ஜீவசத்துப் பொருள்நிறைந்ததே. யாவரும் இப்பாலை விரும்புகின்றனர்.

## ஹோர்லிக்ஸ்

முதல் முதலான மோல்ற் றட்பால்

சாதாரணபால் அல்லது சொக்கலேற் கலந்தது.
முழுவதும் தேகபுஷ்டிக்கான உணவு.

(Mis 40. 3-6&13-6-35)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்த காமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததனல் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.

(Y· 55  1-1-34 to 31-12-35) சிலோன்

## சோதிஸ்காமகிரியி னறிக்கை.

சமயாபிமான சீலர்களே!

தக்ஷிணகைலாயம் என வழங்கும் ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பக்தர்குழாங்கள் மலைப் பிரதிக்ஷணம் புரிவது மிகவும் அபூர்வமான காரியமாயிருந்தமையால் ஸ்ரீ ஸ்கந்தமூர்த்தியினருளால் சென்ற 1927-ம் ஆண்டில் மறைந்திருந்த பாதையைத் திருத்தலானேன். அக்காட்டொடக்கம் யாத்திரிகர்களின் தாகசாந்தியின் பொருட்டு அச்சிகரத்தே ஓர் தண்ணீர்ப்பந்தரையுமமைத்து அஃது பல புண்ணிய சீலர்களினது ஊக்கத்தால் வருடாவருடம் செவ்வனே நடைபெற்று வந்தது. சென்ற வருடம் (1934) ஆடி மகோற்சவ 15 தினங்களிலும் மாணிக்க கங்கையிலிருந்து ஒரு தகரம் தண்ணீர் 40 சதவீதம் எடுப்பித்து இவ்வறனை வழுவாது கடைப்பிடித்தேன். இவ்வருடமும் இத்தர்ம கைங்கரியத்தை இடையூறின்றி நடாத்தப் போதிய பணமின்மையால், சைவாபிமானிக ளெவருமீடுபட்டு இத் திருத்தொண்டைப் பூர்த்தி செய்து வைக்குமாறு தங்கள் அடிபணிந்து வேண்டிக்கொள்ளுகின்றேன். சைவசமய தனவந்தர்க ளிருப்பார்களேயானல் யாத்திரீகர்களது தாகத்தைச் சாந்தி செய்யும் பொருட்டு இத்தண்ணீர்ப் பந்தரை யேற்றுத் தாங்களே நடாத்துவார்களாக! அனேக சைவாபிமாபிமானிகள் இத் திருத்தொண்டி லீடுபடப் பின்வாங்குகின்றார்கள். அந்தோ இவர்களது பக்தியின் மாண்புதானென்னே?

ஸ்ரீ ஷண்முகப்பெருமானைப் பிரார்த்தித்து ஏதேனும் பணம் வைத்திருப்பவர்கள் அல்லது யாத்திரீகர்பணியிலும் தொண்டர்பணியிலும் பற்றுடையோர் தங்கள் தங்களாலியன்ற பண உதவி புரிந்து இறைவனருளைப் பெற்றுய்வார்களாக!!

பணத்தைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு மணி ஓடர் அல்லது போஸ்ரர் ஓடர் மூலமனுப்பவும்.

ஸ்ரீ கதிரமலை அடியான்
ரமண—சங்குராது
கதிர்காமம், திசைமகரும.

21—4—35
(Q. 20 25 4 to 24 7-35.)

## பவுண்மார்க் ஓடுகள்.

| | |
|---|---|
| மலிவு நிறைந்த | பொலிவு நிறைந்த |
| அழகு மிக்க | புகழ்வு மிக்க |
| ஓசை கொண்ட | உயர்வு கண்ட |
| கனங் குறைந்த | காய்வு தந்த |
| கசிவில்லாத | சூடு கொள்ளாத |
| பவுண்மார்க் | ஓடுகள் இவைகளே. |

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதனவென்பதை மறவாதீர்.

தனிஏசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.

சப் ஏசண்டுகள்: சி. க. ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பிஐயா, ஊர்காவற்றுறை.

N. B. மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்.
மற்றெவரிடத்தும் இந்த ஓடுகள் இல்லை.

**Phone No 93.**
(Y. 57. 1-5-35 to 30-4-36)

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின் முதன்மையானதும்
சிறந்ததுமான திவ்விய ஔடதம்.
மிருகக்கொழுப்பு கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

Y. [161-4-34—31-12-3?

பிறர்க்கின்னமுற்பகல்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றானே வரும்.

வான்முகில்வழாதபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறை[illegible]சுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்[illegible]சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ARUNACHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday the 13TH JUNE 1935.